1217

[...] 1929௵ மேௗ 1௳ [பகுதி 4

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

...காகர்த்தர்
...மி முதலியார்,
...யம், சென்னை.

JL
M29.84
186533

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" "இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" என்ற நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது "சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" என்கிற நாவல் நடந்து வருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங் கொண்டது. அடியிற் கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரி௴ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும்	ரூ.	4	0	
பவளத்தீவு 2 பாகமும்	ரூ.	3	0	
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0

மானேஜர்:—"ஆனந்த நிலயம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

அவனுக்குள் ஒரு ஆலோசனை யுதித்ததே, அவன் எழுந்து பின்னுலிருக்கும் அறைக்குச் சென்று, முருகாயியை யழைத்து, "முருகாயி! நீயுடனே ஒரு செவிலித்தாய் போல் வேடமணிந்து புறப்படவேண்டும்" என்றான்.

முருகாயியோ மாறு வேடங்களில் கைதேர்ந்தவள். அவள் சற்று நேரத்திற்குள் ஒரு நாணயமான செவிலித்தாய் போல் வேடமணிந்து விபாங்கன் முன் வந்து நின்றாள். விபாங்கன் அவளிடம் ஒரு சிறு புட்டியை யளித்து "நீ இச் சீட்டிலுள்ள விலாசத்தின்படி சங்கரதாஸின் வீட்டிற்குச் செல். இதோ இந்தச் சீட்டு உனக்கு வந்ததாய்க் கருது. உன்பெயர் சுந்தரம்மாள். நீ என்ன செய்யவேண்டும் தெரியுமா, சங்கரதாஸுக்காகவும் வரதாஸிங்குக்காகவும் என்னென்ன கருவிகள் பாத்திரங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றனவோ அவையாவற்றிலும் இப்புட்டியிலுள்ளதைக் கொஞ்சம் கொஞ்சம் போட்டுவிடு. பத்திரம் மறக்கப்போகிறாய், தவறப்போகிறாய்" என்று கட்டளை யிட்டான்.

முருகாயி அப்படியே செய்கிறேன் என்று தலை யசைத்துவிட்டு மறு நிமிடம் அங்கிருந்து புறப்பட்டாள்.

அயோக்கியர்கள், கள்ளர்கள் முதலிய அக்கிரமஸ்தர்களுக்கு எப்போதும் புத்தி சூக்குமமும் முன் யோசனையும் சமையத்தில் குறைவே. இன்றேல் அவர்கள் சிக்குவது மிகப்பிரயாசை. "இப்போது அச்செவிலித்தாயை அறிந்த வைத்தியர்தானே அவளை வரும்படிக் கடிதம் எழுதியிருக்க வேண்டும். அவர்தானே சங்கரதாஸுக்குச் சிகிச்சை செய்கிறார். அவர் அச்செவிலித் தாயைக்கண்டு பேசமாட்டாரா? அப்போது வந்திருக்கும் ஆள் தாம் வரும்படி கடிதம் அனுப்பிய சுந்தராம்மாள் அல்லவென்று தெரிந்து கொள்ளமாட்டாரா?" என்ற முன்னலோசனை விபாங்கனுக்கேனும் சங்குக்கேனும் புத்தியிற் படவில்லை.

186533

இது மட்டுமல்ல. "சந்திராபாய் இந்த முருகாயியை நேரிலறிவாள். அவள் தன் விரோதியாகிய சுப்பையா பிள்ளைக்கு உடந்தையாயிருந்து, தன் தந்தையை யிரண்டாம் முறை மணந்து கொண்டதாகக் கூறித் தன்னைத் தந்திரமா யழைத்துப் போய் ஒரு தனியான கோயிலில் சுப்பையா பிள்ளையினிடம் விட்டவள் என்று சந்திராபாய் நன்கறிவாள். எந்தச் சமயத்திலேனும் சந்திராபாய் சங்கரதாஸைக்காண வரலாகும். அப்போதவள் முருகாயியைக் கண்டறிந்து கொள்வாள்" என்ற இந்த உண்மையும் அம்மூடர்களுக்குப் புலப்படவில்லை. "கேடுவரின் மதிகெட்டுவரும்" என்ற ஆன்றோர் வாக்குப் பொய்யாகுமோ. துஷ்டர்கள் தங்கள் கெட்ட நடவடிக்கைகளின் பலனை யடைவதற்காக நியாயாதிபதிகளுக்கெல்லாம் நியாயாதிபதியாகிய ஆண்டவனே அவர்கள் மதியை யச்சமயம் மயங்கச்செய்து கெடுத்துவிடுகிறான். எவ்வளவோ புத்தி சாமர்த்தியமுடைய கள்ளர்கள் போக்கிரிகள் முதலிய துஷ்டர்களெல்லாம் இவ்வாறு புத்தி மயங்கியே சிக்கிக்கொண்டு தங்கள் குற்றத்திற்குத் தக்க தண்டனை யடைகிறார்கள் என்பது அனுபவம்.

* * * * *

இதற்கிடையில் டாக்டர் கங்காதரமே சங்கரதாஸின் வீட்டிற்கு வந்துவிட்டார். அவரைக்கண்டதே சங்கரதாஸ் வரதாஸிங் ஜனகன் மூவரும் மிக்க சந்தோஷமடைந்தார்கள். அவர் வந்ததும் தாம் கொண்டுவந்த கருவிகள் முதலிய யாவற்றையும் எடுத்து வெளியில் வைத்துக் கொண்டிருந்தார்.

சற்று நேரத்திற்குள் தமது கருவிகளையெல்லாம் சரியாக விருக்கின்றனவாவென்று பார்த்துக்கொண்ட பின் இரண்டு மேஜைகள் மேல் இருவர்க்கும் படுக்கை யாயத்தம் செய்தார். அவர் தமது உதவி டாக்டரைக் கூடவே யழைத்து

வந்தார். இருவரும் சேர்ந்து இனி நடக்கவேண்டிய விவகாரங்களுக்குத் தக்க வேலையைச் செய்தார்கள். ஏனெனில் சங்கரதாஸ் வரதாஸிங் இருவர் தேகத்தில் இருக்கிற பிராணபத்தான விஷக்கிருமிகளை யுடனே துரிதமாகக் கொன்றாலன்றி அவர்கள் பிழைக்கமாட்டார்கள். அக்கிருமிகள் அவர்கள் இரத்தத்தில் கலந்து விட்டிருக்கின்றன. ஆகையால் உடனே இரத்தத்தில் போய் கலக்கும் மருந்தை யவர்களுக் களிக்கவேண்டும். அம்மருந்தை குழை வழியாய்த் தேகத்தில் ஏற்றவேண்டும். அம்மருந்து பாஷாணமே. அதைச்சிறிய அளவாய் அவர்கள் தேகத்தில்—இரத்தத்தில்—கலக்கும்படிச் செய்யவேண்டும்.

ஆகையால் டாக்டர் கங்காதரம், சங்கரதாஸ், வரதாஸிங் இருவரையும் இரண்டு மேஜை மேலும் படுக்கவைத்து விட்டார். அவர்கள் இருவர் தோள்களிலும் ஒரு விதமான மருந்தை தடவினார். ஏனெனின் அங்குதான் பெரிய இரத்தக்குழல் செல்கிறது. அதில் மருந்தை யேற்றினால் இரத்த முழுவதும் மருந்து கலந்து எங்கும் பரவியிருக்கும் அவ்விஷப் பூச்சிகளைக்கொன்று அவர்கள் இருவரின் உயிர்களையும் காப்பாற்றும்.

இப்போது டாக்டர் செய்யவேண்டியது மிகச்சாமர்த்தியமான சத்திரவேலை. அவர் தமது வேலைகள் யாவும் ஆயத்தமாய்ச் செய்துவிட்டுச் செவிலித்தாயாகிய சுந்தரம்மாள் வரவிற்கு எதிர்பார்க்கிறார். "நேரமாகிறதே இந்நேரம் அவள் வந்துவிடலாமே" என்றார். உண்மையில் இத்தகைய வேலைகளில் அவள் அவர் கூடவிருந்து பன்முறை யுதவி செய்தவள். அவள் மேல் அவருக்கு மிக்க நம்பிக்கை. கடைசியில் அவர் தமது கடிகாரத்தைப் பார்த்து "அவள் இந்நேரம் வரவேண்டுமே" என்றார்.

அவர் அவ்வாறு கூறி வாய்மூடுவதற்குள் வீதியில் ஒரு வண்டி வந்து நின்றது. டாக்டர் "ஆ! அவளாகவே யிருக்க வேண்டும். ஆம் அவளே" என்றார். இரண்டொரு விநாடிகளுக்குள் கள்ளச் செவிலித்தாய் அவர்களிருக்கும் அறைக்குள் சென்றாள். டாக்டர் அவளைக் கண்டதும் அவள் சுந்தராம்மாள் அல்லவென்றுணர்ந்து கலக்கத்தோடு நோக்கினார்.

அதை யறிந்த முருகாயியாகிய கள்ளி "சுந்தராம்மாள் அசௌக்கியமாக விருக்கிறார்கள். அதனால் என்னை யனுப்பினார்கள்" என்றாள். டாக்டர் சற்று சிந்தித்து "அப்படியானால் சரிதான். நீ இச்சமயத்தில் சுறு சுறுப்பாய் வேலை செய்வாயா ?" என்றார்.

முருகாயி "ஆகா" என்று உடனே தன் சட்டைக்கரங்களை மேலுக்கிழுத்துக் கொண்டு தங்கள் கட்டளை யென்னவென்றாள்.

டாக்டர் வியாதியஸ்தருக்கு மருந்தேற்ற வேண்டிய ஊசிகளை யெடுத்து "இவற்றை யிக்குழைகளில் சுத்தமாகப் பொருத்திச் சீக்கிரம்கொண்டுவா!" என்றார்.

இக்கள்ளி யந்த வேலையைமட்டும் செய்வதெனில் சீக்கிரமே வேலை நடக்கும். இவள் மேஜையருகிற் சென்று அந்த ஊசிகளைக் குழைகளில் பொருத்தியபின் மறைவாய்த் தான் கொண்டுவந்த கொடிய பாஷாணத்தை யெடுத்து அந்த ஊசிகளில் பூசிக்கொடுக்க முயன்றதால் சற்று ஆலசியமாயிற்று.

டாக்டர் "ஓ! இத்தகைய ஆலசியம் உதாவது; சீக்கிரம் வேலை நடக்கவேண்டும் "என்றார். இன்னும் இரண்டொரு நிமிடம் ஒன்றும் சம்பவியாம விருந்தால் அக்கள்ளச் செவிலித்தாய் அக்கருவியில் பாஷாணத்தைப்பூசி டாக்டரிட

மளித்துவிட்டிருப்பாள். அதனுல் நோயாளிகள் சுகமடைவ தற்குப் பதிலாக சீக்கிரம் மடிந்திருப்பார்கள். இங்கு தான் கருணுநிதியாகிய பகவான்செயல் வெளியாகிறது.

எப்படியெனில் மூருகாயி ஊசிகளில் விபாங்கன் தன் னிடமளித்த பாஷாணத்தைப்பூசி யதை டாக்டரிட மளிப்ப தற்குள் "ஓ! முருகாயி" என்ற பயங்கரமான ஒருசத்தம் அங்கு கிளம்பியது.

* * * *

சங்கரதாஸுக்கு வரதாஸிங்கின் அசௌக்கியத்தைப் பற்றித் தந்திவந்து அவன்சென்றபின் சந்திராபாயின் மனம் மிக்க கலக்கமடைந்தது. விபாங்கன் தன்னை விடுதலைசெய் தபோது "உன் சிநேகர்கள் ஒவ்வொருவராக முன்னே மிக்க பலகீனமுற்று மடிவார்கள். பிறகு உன் சுற்றத்தார் அனைவரும் ஒவ்வொருவராக மடிவார்கள். நீ மட்டும் அனு தரவாய் நின்றுவிடுவாய். கடைசியில் உன்முறைவரும்" என்று கூறியது அவள் நினைவிற்கு வந்தது.

அவள் உடனே தன் தோழியை யழைத்து "நான் உடனே இந்திரபுரிக்குச் செல்ல வேண்டும்" என்ருள். அவ் வாறே அடுத்தாற்போல் புறப்படும் வண்டியில் ஏறி நகரத் திற்கு வந்து சேர்ந்தாள். சேர்ந்ததும் அவள் மனதில் இருந்த கலவரத்தால் சங்கரதாஸையும் வரதாஸிங்கையும் காணுமுன் எந்தக்காரியத்தையும் கவனிக்கலாகாது, வீட்டிற் கும் செல்லலாகாது என்று தோன்றியது. அதனுல் அவள் இரயில் விட்டிறங்கியதும் நேரே சங்கரதாஸின் வாசஸ்த லத்தை நோக்கிச்சென்ருள்.

அவ்வீட்டினெதிரில் வண்டியைவிட் டிறங்கியதும் தன் தோழியை வண்டியிலேயே யிருக்கச் சொல்லிவிட்டு தான் மட்டும் முன்னுடிச் சங்கதியனுப்பாமலே நேராக உள்ளே நுழைந்து சங்கரதாஸ் இருக்கும் அறைக்குச் சென்ருள்.

சந்திராபாய் அந்த அறையொரு வைத்தியசாலைபோல் மாறியிருப்பதைக் கண்டதே துயரமும், கலக்கமு மடைந்து பிரமித்து நின்றாள். மறு விநாடி அங்கு ஒருபுறம் நிற்கும் முருகாயைப்பார்த்துவிட்டாள். அவளுக்குண்டான வியப்பிற்கும் பீதிக்கும் அளவேயில்லை. முருகாயி எதிரிகளின் உளவாளி யென்பது அவளுக்கு நன்ருகத்தெரியும் அப்படிப்பட்டவள் இங்கு வந்திருப்பதைக் கண்டதே எதிரிகள் தாராளமாக உள்ளேயே நுழைந்து வேலை செய்கிருர்கள் என்று அவள் மனதிற் பட்டதும் அவளுக்குண்டான பீதியால் தான் "ஓ! முருகாயி" என்று சத்தமிட்டாள்.

அதைக்கேட்ட டாக்டரின் உதவியாள் சந்திரபாய் செவிலித்தாயின் பெயரையிட் டழைக்கிருள் என்றெண்ணி அவளருகில் சென்று "சற்று பேசாமலிரு..." என்றதே சந்திராபாய் "ஓ இவள் செவிலித்தாயல்ல, கள்ளி குற்றவாளி" என்று கூவினுள். அதைக் கேட்ட டாக்டர் பிரமித்து சந்திராபாயையும் முருகாயியையும் நோக்கினுர். அவருக்கு முருகாயி அறிமுகமல்ல.

இதற்குள் சந்திராபாய் வந்துவிட்டதைக் கண்ட முருகாயி சட்டென்று பாய்ந்து ஓட்டம்பிடித்தாள். டாக்டரின் உதவியாள் அவளைப் பிடிக்க ஓடினுன். முருகாயி வீதியில் பிரவேசித்ததும் சற்று தூரத்தில் நின்றிருந்தவண்டியில் ஏறிக்கொண்டாள். அவ்வண்டியில் சங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிருன். பின்னுல் துரத்திச்சென்றவன் ஓடிப்போய் வண்டியைப்பற்றினுன். ஆனல் சங்கு அவனைப்பிடித்துத் தள்ளிவிட்டு வண்டியை வேகமாய் விட்டுக்கொண்டு சென்ருன்.

பின்னுல் துரத்திவந்த ஆள் திரும்பிப்போய் விட்டதைக் கண்டபின் சங்கு முருகாயியை நோக்கி "என்னமுட்டாள்!"

என்ருன். முருகாயி "அய்யோ! நான் என்னசெய்வேன். எதிர்பாராதவண்ணம் அந்த சந்திராபாய் அங்குவந்து என்னேக் கண்டுபிடித்து விட்டாள். நான் ஓடிவந்திராவிட்டால் என்னேப் பிடித்துக்கொண் டிருப்பார்கள்" என்ருள்.

சங்குக்கு மிகக் கோபம் வந்துவிட்டது. அவன் அவளேப் பயமுறுத்தினன். முருகாயி நடுங்கிவிட்டாள். ஆயினும் இனிப்பேசுவதில் பயனில்லையென்று துரிதமாய் வண்டியைச் செலுத்தினன். இப்போது சந்திராபாய்க்கு மிக்க கலவரமாய் விட்டது. அவள் ஆவலோடு டாக்டரைநோக்கி "என்னதான் சமாசாரம்?" என்று வினவினள். டாக்டர் இவர்களுக்கு எப்படியோ மாறுசுரம் தொத்திக்கொண்டது" என்ருர்.

அச்சமயம் டாக்டரின் உதவியாள் பெருமூச்சவிட்டுக் கொண்டே வந்து "அவள் ஒரு வண்டியிலேறித் தப்பித்துக் கொண்டு போய்விட்டாள்" என்ருன். டாக்டர் "அடடா! எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. நான் உடனே வேலே செய்ய விருந்தேன். இன்னெரு செவிலித்தாயை வரவழைக்கவோ அவகாசமில்லே. ஒவ்வொரு விநாடியும் முக்கியமானது" என்ருர்.

டாக்டர் கூறிய மொழிகளேக் கேட்டதே என்ன நடந்ததென்று அவர் அறிவதற்குள் சந்திராபாய் ஒரு விநாடியில் தன் மேற்சட்டையைக் கழற்றிவிட்டுப் போர்வையையும் அதையும் எட்ட வைத்துவிட்டு உட்சட்டைக் கையை மேலே தள்ளிக்கொண்டு டாக்டரை நோக்கி "இன்னது செய்யவேண்டு மென்பதை மட்டும் அறிவியுங்கள் நான் செவிலித்தாயா யிருக்கிறேன்." என்ருள். அவளுடைய உதார குணத்தைக்கண்ட டாக்டர் முதலியவர்கள் மிக்க வியப்பும் சந்தோஷமு மடைந்தார்கள்.

இச்சம்பவம் நடந்து இரண்டொரு வாரங்கள் கழிந்தன. சங்கரதாஸும் வரதாஸிங்கும் இன்னும் பலகீனமான நிலைமையிலிருந்தாலும் அவர்கள் கொடிய வியாதி நீங்கியது. டாக்டர் கங்காதரம் தமது சாமார்த்தியத்தால் அவர்களுக்குப் பூரண சுகமுண்டாக்கி விட்டார். ஒருநாள் சங்கரதாஸ் தன்னறையி லுட்கார்ந்து வாசித்துக்கொண் டிருக்கிருன். வரதாஸிங் கடிதம் வரைந்துகொண்டிருக்கிருன்.

அச்சமயம் கதவு திறக்கப்பட்டதும் சந்திராபாயும் அவள் அத்தையும் உள்ளே வந்தார்கள். சந்திராபாய் சங்கரதாஸை நோக்கி "நீங்கள் க்ஷேமந்தானு" வென்றுள். அவன் ஆம் என்ருன். சந்திராபாய் உண்மையாகவா என்று வியப்போடு கேட்டாள். சங்கரதாஸ் ஆம் இதோ பார் என்று கூறி முன்பு தானும் வரதாஸிங்கும் சுரத்தால் பிடிக்கப்பட்டிருந்த போது அவர்கள் தேகத்திலிருந்து எடுக்கப்பட்டிருந்த இரத்தத்தை எடுத்து பூதக்கண்ணுடியால் அதைப் பார்க்கும்படி சந்திராபாயிடம் கூறினன். அவள் அவ்வாறே நோக்கிய போது அந்த இரத்தத்தில் பயங்கரமான சிறு கிருமிகள் இருப்பதைக் கண்டாள். சங்கரதாஸ் அதன் பிறகு தன் புயத்தில் இருந்து இரண்டு துளி இரத்தம் எடுத்து அதைச் சோதிக்கும்படி கூறினன். அதைப் பார்த்தபோது அது நல்ல சுகதேகிகளின் இரத்தம்போ லிருந்தது. அதைக் கண்டதே சந்திராபாய் "ஆ! மிக்க சந்தோஷம்" என்ருள்.

சங்கரதாஸ் "நீயே சமயத்தில் வந்து எங்கள் உயிர்களைக் காப்பாற்றினுய். உனக்கு நாங்கள் எப்போதும் நன்றி பாராட்ட வேண்டியவர்கள்" என்ருன். பிறகு இருவரும் கைகுலுக்கிக் கொண்டார்கள். சந்திராபாய் பின்னும் சற்று நேரம் சந்தோஷமாகச் சம்பாஷித்துக்கொண் டிருந்தபின் அவளும் அவள் அத்தையும் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

* * * *
* * * * *

இப்போது நாம் இன்னொரு விடத்தில் நடக்கும் சங்கதிகளைக் கவனிக்கவேண்டியது அவசியமாக விருக்கிறது. இந்திரபுரி நகரின் ஒரு பிரதேசத்தில் சீனுக்காரர்களே வசிக்கிறார்களென்பது தெரிந்த விஷயமே. அப்பிரதேசத்திலுள்ள இரகசியமான இடங்கள் சிலவற்றில் அபினிப்புகை பிடிக்கும் கடைகளிருக்கின்றன. அவை மிக்க இரகசியமும் மறைவுமான விடங்கள். அந்த அபின் புகை பிடிப்பதற்கு நம் நாட்டில் சீட்டா என்றும் அந்த இடங்களுக்குச் சீட்டாக்கடைகளென்றும் பெயர். அத்தொழில் சட்ட விரோதமானதாகையால் அது எங்கும் மிக்க இரகசியமாகவே நடைபெறுவது வழக்கம்.

ஒருநாள் இத்தகைய இடங்களில் ஒன்றில் சங்கு ஒரு ஆசனத்தி லுட்கார்ந்து இனி நமது விரோதிகளான சந்திராபாய், சங்கரதாஸ், வரதாஸிங், இவர்கள் மேல் எம்மாதிரி வஞ்சம் தீர்த்துக்கொள்வதென்று நமது எஜமானுகிய விபாங்கனுக்கு ஆலோசனை கூறலாம் என்று ஆழ்ந்த சிந்தனையிலிருக்கிறான்.

அவனைச்சூழ்ந்து அனேகம் சீனுக்காரர்களும் அந்நாட்டாரும் இருக்கிறார்கள். அவர்களனைவரும் அந்த அபினிப் புகையால் உண்டான போதையில் ஒருபோதும் நடக்காத அபூர்வகாரியங்களை யெல்லாம் தாங்கள் செய்வதாகச் சாக்கிரத்திலேயே கனவுகண்டுகொண் டிருக்கிறார்கள். அச்சமயத்தில் அவர்கள் நினைப்பவை யனைத்தும் அப்படியப்படியே பிரத்தியட்சமாக நடப்பதுபோல் அவர்களுக்குத் தோன்றும்.

அச்சீட்டாக்கடையின் முதலாளியான அப்புக்குட்டியென்பவன் ஒரு குழியில் அபினிமருந்தைத் தீயில் பதப்

படுத்திவைத்துப் புகைபிடிப்பதற்காகச் சங்குவிடம் அளிக்க நீட்டுகிருன். அச்சமயம் நாணயமான உடையணிந்த ஒரு மனிதன் உள்ளேவந்தான். அவன் அந்த நாட்டானே. உள்ளேவந்து நாற்புறங்களிலும் நோக்கினன். அங்கிருந்த வர்களனைவரும் சந்தேகத்தோடு அவனை யுற்றுநோக்கினர் கள். அப்புக்குட்டிகொடுத்த குழாயை வாங்கிக்கொண்ட சங்கும், யாவரும் பார்ப்பதைக்கண்டு தானும் அவனைநோக் கினன்.

சங்கு அப்புக்குட்டியை நோக்கி இரகசியமாய் "அந்த வெள்ளைப் பிசாசைப்பார்" என்று அப்புக்குட்டியின் பார் வையை வந்தமனிதன்மேல் செலுத்தினன். அப்புக்குட்டி யுடனே அப்புது மனிதனிடம் சென்று, "என்? என்னகார ணமாக நீ யிங்குவந்தாய்?" என்று கடுகடுப்போடு கேட் டான்.

அம்மனிதன் "நான் ஒரு ஆகாயகமனி. என்பெயர் ஜகநாதன். நான் உற்சாகத்திற்காகச் சீட்டாப்புகை பிடிப் பதுவழக்கம். எதோ எனக்கொரு குழாய் கொண்டுவா" என்ருன்.

அப்புக்குட்டி சற்று சிந்தித்துக் கடைசியில் சங்கின் முகத்தை நோக்கினன். எனெனில் அவன் சங்கின் அபிப் பிராயத்திலும் ஆலோசனையிலும் மிக்க மதிப்புடையவன். சங்கு அப்புக்குட்டியின் குறிப்பையறிந்தது தலையால் "சரி தான். செய்" என்று சமிக்கை செய்தான். அப்புக்குட்டி யுடனே அவனை யழைத்துப்போய் அருகிலுள்ள காலியாக விருந்தஒரு ஆசனத்தில் ஜகநாதன் என்பவனை யமரச்செய்து அவனிடம் ஒரு சீட்டாக்குழாயை யளித்தான்.

சங்கு சற்றுநேரம் வரையில் அப்புதுமனிதனைச் சந்தே கத்தோடேயே பார்த்துக்கொண் டிருந்தான். கடைசியில்

அவன்மேலிருந்த சந்தேகம் சரியானதல்லவென்று சங்கின் மனதிற் பட்டதோடு, இவன் நமது காரியத்திற்கு உதவியாக விருப்பானென்று அவன் மனதிற் புலப்பட்டது. உடனே ஏதோ எழுந்து தற்செயலாகச் செய்பவன்போல் தன் ஆசனத்தை யவனருகி லிழுத்துச்சென்று அங்கு உட்கார்ந்து அவனிடம் சாதாரணமாகப் பேசத்தொடங்கிக் கடைசியில்,

" என் க்ஷேமந்தானு. நீ யொரு ஆகாயகமனி யென்று கூறினே யல்லவா?" என்முன். ஜகநாதன் ஆம் என்றதே சங்கு "நீ கூலிக்குப் பறப்பது போலும்" என்முன். ஜகநாதன் "ஆம். கூலி பந்தயம், யாவும்" என்று மிக்க உற்சாகத்தோடு மொழிந்தான். அதற்குள்ளாகவே அவனுக்கு நல்ல போதை யேறிவிட் டிருக்கிறது.

சங்கு அவனருகி லுட்கார்ந்து சம்பாஷித்துக் கொண்டும் புகை பிடித்துக்கொண்டு மிருந்தான். சங்கு கூறிய ஆசை வார்த்தைகளால் அம்மனிதன் மயங்கிப்போய்ச் சங்கின் பிரியப்படி அவன் அங்கிருந்து வெளிப்பட்டபோது அவன் கூடவே சென்முன்.

அவர்களிருவரும் சீனுக்காரர் இருக்கும் நெருக்கமான வீதிகளில் நுழைந்து கடைசியில் ஒரு பாழடைந்ததுபோன்ற வீட்டில் நுழைந்தார்கள். சங்கு கதவைத் தட்டியதும் ஒரு வேலையாள் வந்து கதவைத்திறந்தான். சங்கு அவனிடம் ஏதோ குசுகுசுவென்று கூறினன். அவன் உள்ளே சென்று இரண்டொரு நிமிடங்களில் திரும்பிவந்து இருவரையும் அழைத்துப்போய் உள் அறையிலிருக்கும் விபாங்கன்முன் நிறுத்தினன்.

சங்கு விபாங்கனுக்கு வந்தன மளித்தபின் தங்கள் பாஷையில் "எஜமானே! இதோ ஒருவனை யழைத்துவந்

திருக்கிறேன். இவன் நமது வேலைக்கு உபயோகப்படுவான்'' என்றான். அம்மொழிகளைக் கேட்ட விபாங்கன் ஜகநாதனை மரியாதையோடுபசரித்தான். அதன் பின் சங்கு தன் எஜமானிடம் வானத்தைச் சுட்டிக்காட்டி என்னமோ கூறினான்.

விபாங்கன் சற்றுநேரம் வரையில் சங்கு கூறியதை யறிந்துகொள்ள முடியவில்லை. கடைசியில் சங்கதி இன்னதென்றுணர்ந்து சங்கை நோக்கி "ஓ! அவன் வானத்தில் பறக்கிறான் என்று கூறுகிறாய்?'' என்று கேட்டான். ஏனெனில் அத்தகைய சங்கதி யவன் இது காறும் அறியாதது.

சங்கு தன் எஜமான் கேட்ட கேள்விக்கு ஆம் என்று தலையசைத்து விட்டதோடு "எஜமானே! இவன் வானத்தில் பறப்பதோடு மேலேயிருந்து கீழே குறித்த விடத்தில் எதையும் போடச் சக்தியுடையவன்'' என்று எழுந்து நின்று ஒரு வெடிகுண்டைக் கீழே குறிபார்த்துப் போடுவதுபோல் கரங்களால் சமிக்கைசெய்து காட்டினான்.

யாவும் அறிந்துகொண்ட விபாங்கன் உடனே தான் வெளியிற் செல்லும்போ தணியும் உடைகளை யணிந்துகொண்டு "நீ என்னோடுகூட வா!'' என்று கூறி ஜகநாதனை வெளியில் அழைத்துச் சென்றான்.

17-வது அத்தியாயம்

மேல்கண்ட சங்கதிகள் நடக்கும் தினம் காலை முன்னேரத்தில் சங்கரதாஸனும் சந்திராபாயும் சாத்தான் தீவு என்னும் இடத்திற்குச் சென்றார்கள். அங்குள்ள கோட்டையில் சைனியத்தில் ஒரு உத்தியோகஸ்தனாக விருக்கும் லெப்டினென்ட் வேலப்பன் என்பவன் இருக்கிறான்.

அவன் சங்கரதாஸின் அன்பார்ந்த நண்பன். சங்கரதாஸ் புதிதாய் ஒரு அபூர்வமான வெடிக் கருவியைக் கண்டு பிடித்திருக்கிறான். அவ் விஷயத்தில் வேலப்பனுக்கு மிக்க ஆவலுண்டாயிருந்தது. வேலப்பன் இருக்கும் பட்டாளம் சாத்தான் தீவிலிருக்கும் கோட்டையில் தானிருக்கிறது. அங்கிருக்கும் காட்சிகளைக் காட்டுவதற்காகவே சங்கரதாஸ் சந்திராபாயையு மழைத்துச் சென்றான்.

அவர்களிருவரும் அக்கோட்டையிலுள்ள காட்சிகளையெல்லாம் பார்த்தார்கள். ஆனால் எல்லா வஸ்துக்களிலும் அந்தப் புது வெடிக்கும் கருவியும் அதைக் கையாடும் முறைகளுமே சங்கரதாஸின் மனதை யதிகமாகக் கவர்ந்தன. அக்கோட்டையில் எப்போதும் வெடிக் கருவிகள் முதலியவைகள் வைக்கப்படும் காயமான கிடங்கு ஒன்றிருக்கிறது. அதோடு சமயங்களில் கிடங்காக உபயோகிக்கப்படும் ஒரு பெரிய கட்டிடம் வேறாக இருக்கிறது. அந்த விடத்தில் அருகிலிருந்த இரயில் பாதையிலிருந்து சாமான்களைச் சில சிப்பாய்கள் உள்ளே யெடுத்து வந்துகொண் டிருந்தார்கள். அவர்கள் சிப்பங்களை மிக்க ஜாக்கிரதையோடு எடுத்து வந்தார்கள்.

யாவும் பார்த்துக்கொண்டே வந்த சங்கரதாஸ், சந்திராபாய், லெப்டினென்ட் வேலப்பன் இவர்கள் அங்கு நின்று அக்காட்சியைப் பார்த்துக்கொண் டிருந்தார்கள். சந்திராபாய் அங்கு இருந்த ஒரு குவியலி லிருந்து பளுவான தலையையுடைய கூர்மையான ஒரு கருவியை யெடுத்து இதென்னவென்று வேலப்பனைக் கேட்டாள்.

வேலப்பன் "இது ஆகாய விமானத்திலிருந்து எறிவதற்காகப் புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்ட ஒருவித அம்பு" என்றான். சந்திராபாய் "ஆ! என்ன ஆச்சரியம்! இவற்றை யெப்படி யுபயோகிப்பது?" என்றாள்.

லெப்டினென்ட் வேலப்பன் உடனே யந்த அம்புகளில் ஒன்றை யெடுத்து பூமியின்மேல் எறிந்தான். அது தரையில் தைக்கப்பட்டிருந்த பலகையில் பொத்துக் கொண்டது. அவர்கள் சற்றுநேரம் பேசிக்கொண் டிருந்தபின் உலவிக் கொண்டே போய் கோட்டை மைதானத்தில் பிரவேசிக்கும் வாயிற்படியருகிற் சென்றார்கள். அங்கு ஒரு போர்வீரன் காவல் நின்றிருந்தான். அவன் இவர்களைக் கண்டதே வந்தன மளித்தான்.

சந்திராபாய் "போய் வருகிறோம் உனக்கு மிக்க வந்தனம்" என்று கூறி லெப்டினென்ட் வேலப்பனுடைய கரத்தைப்பற்றிக் குலுக்கினாள். சங்கரதாஸ் "ஆம். மிக்க வந்தன மளிக்க வேண்டியதே. நீ எங்களுக்குக் காட்டியவை நல்ல கண் காட்சிகள். ஆ! வேலப்பன் நீ நாளைக்கு என்னுடைய ரசாயன சாலைக்கு வரவேண்டுகிறேன். நீ கண்டு பிடித்த வற்றிலிருந்து நான் அறிந்துகொண்ட இரண்டொரு அற்புத விஷயங்களை யுனக்குக்காட்ட விரும்புகிறேன்" என்றான்.

வேலப்பன் "ஆகா! எனக்கு மிக்க சந்தோஷமே" என்றான். மறு நிமிடம் சந்திராபாயும் சங்கரதாஸும் அவனை விட்டுப் புறப்பட்டார்கள்.

இவர்கள் நின்ற இடத்தில் இடம் சரிவாக விருந்தது. அங்கு சில குழாய்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவை அகன்று நீண்ட பெரிய குழாய்கள். அக்குழாய்களில் ஒன்றில் ஒரு சிறிய மெலிந்த சீனக்காரன் நுழைந்து படுத்துக் கொண்டிருந்தான். அவன் விபாங்கன் ஆட்களில் ஒருவன். அவன் பெயர் சங்கிலி. இவர்களில் ஒருவரும் அவன் அங்கிருப்பதைக் காணவில்லை. அவன் இவர்கள் பேசியவற்றை யெல்லாம், முக்கியமாய்ச் சங்கரதாஸ் கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் விடாமல் கேட்டுக்கொண்டான்.

சங்கரதாஸும் சந்திராபாயும் அங்கிருந்து புறப்பட்டதே அச்சீனக்காரன் காவலிருந்த போர்வீரன் திரும்பி எதிர்பக்கம் செல்லும் சமயம் பார்த்து மெதுவாய்க் குழாயிலிருந்து வெளிவந்து அப்போர்வீரன் பார்வைக்கு மறையுமட்டும் அங்கிருந்த குழாய்ப்போர்களில் மறைந்து மறைந்து சென்று, அதன்பின் துரிதமாய் நடந்து சங்கரதாஸும் சந்திராபாயும் செல்லும் வழியே அவர்களுக்குத் தெரியாமல் அவர்களைப் பின்பற்றிச் சென்றான்.

* * * *

சங்கரதாஸ் சந்திராபாயை யழைத்துப்போய் அவளுடைய வீட்டில் விட்டுவிட்டு அங்கிருந்து நோகத் தன் அறைக்குச் சென்றான். அச்சமயம் வரதாஸிங் "நட்சத்திரம்" பத்திரிகைக்கு அனுப்புவதற்காக ஏதோ சமாசாரம் வரைந்துகொண் டிருக்கிறான்.

சங்கரதாஸ் விளையாட்டாக வரதாஸிங்கின் தோளைப் பற்றிக்கொண்டே "ஏதோ மிக்க சிரத்தையோடு வேலை செய்கிறாய் போல் தெரிகிறது" என்றான். உண்மையில் வரதாஸிங் மிக்க சிரமத்தோடேயே அதை வரைந்து கொண்டிருந்தானாதலால் "ஆம். ஆயினும் நீ சந்தோஷமாக விருப்பதைக் காணவே என் சிரமம் பரிகாரமடைந்தது" என்றான்.

சங்கரதாஸ் கோட்டைக்குச் செல்லுமுன் ஒரு இரசாயன ஆராய்ச்சி செய்துகொண் டிருந்தான். அதை யிடையில் விட்டுவிட்டே கோட்டைக்குச் சென்றான். ஆதலால் இப்போது திரும்பி வந்ததும் தன் மேற்சட்டையைக் கழற்றிவிட்டு, சாளரத்தினருகிற் சென்று அங்கிருந்த ஒரு குழாயையெடுத்துக்கொண்டு இரசாயன ஆராய்ச்சி செய்யும் மேஜையருகில் வந்தான். சங்கரதாஸ் அக்குழாயைத் தீபத்தில் காட்டியபோது அதிலிருந்த திரவ பதார்த்தம் கொதிக்கத்

தொடங்கியது. சங்கரதாஸ் அதைக் கொதிக்க வைத்த போது அதிலிருந்த ஒருவிதப் புகை வெளிப்பட்டது. சங்கரதாஸ் குழலைத் தீயினின்றும் எடுக்காமல் அப்படியே வைத்திருப்பதைக் கண்ட வரதாஸிங் "என்ன சங்கதி?" என்றான்.

சங்கரதாஸ் ஒன்றுமில்லை யென்றான். ஓகோ இவன் மனம் சந்திராபாய் மேலிருக்கிறது என்று வரதாஸிங் எண்ணிக்கொண்டே சுருட்டுப்பிடிக்க ஒரு நெருப்புக் குச்சியைக் கிழித்தவன் தற்செயலாய்ச் சாளரத்தில் நோக்க நோக்கினான்.

அவ்வீட்டின் எதிர்வாடையிலுள்ள ஒரு வீட்டின் மேல் மச்சில் ஒரு கண்ணாடி யிருப்பது போலும் அதில் தங்கள் அறையின் பிரதிபிம்பம் தெரிவது போலும் தோன்றியது. அவன் உடனே வியப்போடு சத்தமிட்டான். அதற்குள் அவன் கையிலிருந்த தீக்குச்சி பற்றிக்கொண்டே வந்து கரத்தைச் சுட்டுவிட்டது.

சங்கரதாஸ் அவன் சத்தமிட்டதைக் கேட்டு மிக்க வியப்படைந்து என்ன சங்கதி யென்று வினவினான். வரதாஸிங் "சீக்கிரம் வந்து பார். எதிர் வாடையிலுள்ள வீட்டின் மேலிருந்து யாரோ நமது செய்கைகளை வேவுபார்க்கிறார்கள்" என்றான்.

சங்கரதாஸ் உடனே பூரணமாக எச்சரிக்கை யடைந்து விட்டான். அவன் வரதாஸிங்கை நோக்கி "ஒரு நிமிடம் பொறு. மறைந்து கொள். நாம் அவர்களைப் பார்க்கிறோமென்பதை யவர்களறியலாகாது. சட்டென்று கீழே குனிந்து விடு" என்றான்.

வரதாஸிங் அவ்வாறே மறைந்து கொண்டபின் சங்கரதாஸ் தன்னிடமுள்ள அபூர்வமான கண்ணாடிக் கருவியை யெடுத்தான். அதனால் ஒரு அறையில் ஒரு மூலையிலிருப்

பவர்கள் நடக்கைகளைக்கூடக் கதவிலுள்ள சிறுதுவார வழியாய் நன்றாகக் கண்டறியலாகும். சங்கரதாஸ் அக்கருவியை யெடுத்துச் சரியாகப் பொருத்திக் கொண்டு முழங்காலிட்டுக்கொண்டே சாளரத்தினருகில் வந்து எதிர் வீட்டிற்கு நேராக அக்கருவியை நிறுத்தி மெதுவாய் மேலுக்கு உயர்த்தி அதன் மூலமாக நோக்கினான்.

வரதாஸிங் எண்ணியது போல எதிர்வாடையில் தூரத்திலுள்ள ஒரு பழைய அறையின் சாளரத்தில் இரண்டு பிரதிபலித வட்டக்கண்ணாடிகள் வைக்கப்பட்டிருப்பதையும் தன் அறையும் அதிலுள்ளவைகளும் அவற்றில் பின்பக்க மிருப்பதில் பிரதிபலித்து பிறகு அதற்கு எதிர்முகமாக விருக்கும் முன்பக்கக் கண்ணாடியில் பிரதிபலிப்பதைக் கண்டான். அந்தக் காட்சியைக் கண்டதே இருவரும் மிக்க வியப்படைந்து எழுந்து நின்றார்கள்.

வரதாஸிங் "என்ன சமாசாரம்? நாம் என்ன செய்ய வேண்டும்?" என்றான்.

சங்கரதாஸ் பதில் கூறாமல் தனக்குள்ளாகவே அந்த வியப்பான சம்பவத்தைப்பற்றிச் சிந்துத்துக் கொண்டேயிருந்தான்.

நடந்த சங்கதி யென்னவெனில் சங்கரதாஸும் சந்திராபாயும் கோட்டையில் வேலப்பனிடம் பேசிவிட்டுத் திரும்பியபோது அவர்களைப் பின் தொடர்ந்து வந்த சீனக்கார கள்ளனாகிய சங்கிலி யென்பவன் சங்கரதாஸை விடாமல் இரசாயனச்சாலை வரையில் பின்பற்றியே வந்திருக்கிறான். அத்துஷ்டன், சங்கரதாஸ் தன் அறைக்குள் நுழைந்தபின், மறைவிலிருந்து எட்டிப்பார்த்துக்கொண் டிருந்து சற்று நேரங்கழித்து திரும்பிப் போய்விட்டான்.

திரும்பிச் சென்றவன் எதிர்வாடையிலிருந்த வீட்டிற்குள் நுழைந்து கதவைப் பத்திரமாக உட்பக்கம் தாளிட்டுப்

பூட்டிக்கொண்டு மேலே யிருக்கும் சாளரத்தின் வழியாய்ச் சங்கரதாஸின் அறையை நோக்கினன். அங்கிருந்து பார்த்த போது சங்கரதாஸின் அறையில் நடக்கும் விவகாரங்கள் நன்ருகப் புலப்படவில்லை. அதன்மேல் அங்கிருந்த ஒரு அலமாரியைத் திறந்து இரண்டு சதுரமான கண்ணுடிகளை யெடுத்துப் பொருத்தி வைத்துப் பார்க்கத்தொடங்கினன்.

அந்த வீடு ஒரு பாழடைந்த காலிவீடு. முன் யோசனை யோடு தங்கள் அக்கிரமச் செயல்களுக்காக இச்சீனுக்கள்ளர் அதை வாடகைக் கெடுத்துத் தங்கள் வசம் வைத்துக்கொண் டிருக்கிருர்கள். இவர்கள் எவ்வளவு சாமார்த்தியமாகவும் முன் யோசனையோடும் தங்கள் காரியங்களைச் செய்யினும், அதில் எத்தகைய ஆபத்துகளுக்குத் துணிகினும், தங்கள் காரியம் அக்கிரமமானதாக விருக்கிற வரையில் ஆண்டவன் நமக்குத் துணைசெய்ய மாட்டாரே யென்று அறிவு அவர் களுக்கு இருப்பதில்லை.

இத்துஷ்டர்களுக்கு வேண்டியது பணமே. பணம் கிடைப்பதாயின் தங்கள் நடக்கையால் பாபமா புண்ணியமா என்பதை யவர்கள் கவனிப்பதில்லை. ஆனல் இவர்கள் மேல் அவ்வளவாய்க் குற்றங்கூறுவதற்கில்லை. எனெனில், ஆதி முதல் இவர்களுக்கு நல்ல சகவாசமுமில்லை கல்வியுமில்லை. இப்போது பிரத்தியட்சமாக உலகில் நம் நாட்டிலேயே கல்வி கற்று அதில் பட்டங்கள் பெற்றவர்கள்கூட, பாபம் புண்ணி யம், என்பதைக் கவனியாமலே, நாம் உண்மையை வெளிக் குக் கொண்டுவந்து நீதியை நிலைநிறுத்த வேலை செய்கிரேமா, அல்லது உண்மையை மறைத்து, பொய்யை மெய்யாக்க வேலை செய்கிரேமா என்பதைச் சிந்திக்காமலே, பணம் வந் தால் போதுமென்று மனமறிந்து பொய்யை மெய்யென வாக்கு வல்லமையால் காட்டி மெய்யை மறைத்துப் பணம் சம்பாதிக்கிருர்கள்.

இவர்கள் தாங்கள் பணம் சம்பாதிக்கவேண்டும் என்ற ஒன்றை மட்டுமே கருதுகிறார்களன்றி, நாம் அப்பணத்தை எவ்வழியி லீட்டுகிறோம்? அதனால் நமக்கு புண்ணியம் கிடைக்குமா, இரௌரவாதி நரகம் கிடைக்குமா? என்பதை யெள்ளளவும் சிந்திக்கிறார்களில்லை.

அந்தோ கல்வியால் இவர்கள் அடைந்தது யாது? இவர்கள் கற்றது வயிற்றுக் கல்வியே. மெய்யறிவை யளிக்கும் ஆன்மார்த்தக் கல்வியல்ல. இவ்வுலகினர் இவர்களைப் பின்னால் இகழ்ந்து கூறினும் நாகரீக மயக்கால் இவர்கள் கல்விக்காக வெளிக்கு இவர்களைக் கௌரவமாய் நடத்துகிறார்கள். அதுவும் மனப்பூர்வமாகவல்ல. ஆனால் எல்லார் உள்ளத்திலும் சர்வாந்திரியாமியாயுள்ள பகவானே இவர்கள் மனப் போக்கைக் கவனிப்பாரே யன்றி இவர்களது ஆபாசமான கல்விப் பட்டங்களை யொருபோதும் கருதார். அவர் இவர்களின் மனநிலைமையையும் கர்மங்களையும் கருதி அதற்குத் தக்கப்பலன்களையே யளிப்பார் என்பது நிச்சயம்.

இவர்கள் கல்வியறிவோடு இத்தகைய தொழில்களைச் செய்கிறார்கள். நமது விபாங்கன், சங்கு, அவர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள் கல்வியில்லாமல் இத்தகைய காரியங்களைச் செய்கிறார்கள். இவர்கள் இருவர்களிலும் குற்றம் செய்வதில் வித்தியாசம் ஒன்றுமே யில்லை. ஆனால் தண்டனை யடைவதில், கடவுள் சமுகத்தில் வித்தியாசமுண்டு. ஏனெனில் கல்விகற்று, அதிலும் பட்டங்கள் பெற்று நீதியை நிலைநிறுத்த வந்தோம் என்றவர்கள் நீதியை யநீதியாகவும் அநீதியை நீதியாகவும், பொய்யை மெய்யாகவும், செய்யும் தொழிலைச் செய்வதற்கும், கல்வி யறிவாவது நல்ல சகவாசமாவது இல்லாத மூடர்கள் பண ஆசை யொன்றையே கருதி பாப புண்ணியம் தெரியாமல் குற்றம் செய்வதற்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறது.

இத்தகைய தொழில் செய்வோர் யாரென்பதை நாம் வெளியிடவேண்டியது அனுவசியம். ஏனெனில் இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் தாம் தாம் செய்யும் தொழில் எத்தகையதென்றும் எவ்வழியாகப் பொருளீட்டிச் சீவனம் செய்கிறேமென்றும் சிந்தித்துப்பார்த்தால் அவரவர்களுக்கே யுண்மை விளங்கும்.

"பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை"

எனப் பொய்யா மொழியார் புகன்றார்.

புண்ணிய பூமியாகிய இப்பரதகண்டத்தில் பிறந்த நம்மவர்கள், ஆன்மார்த்த க்ஷேமத்தையே உயிரினும் சிறந்ததாகவும், உலக போகங்களை நிலையற்ற பொய்யாகவும் கருதி நடக்கவேண்டியவர்கள், பாபத்தை யளிக்கும் வழியில் ஜீவனம் செய்வதைத் தகுதியல்ல வென் றுணர்ந்து நம் முன்னோரின் பெருமையை நிலைநிறுத்த வேண்டுமென்று இதைக் கூறினேமேயன்றி வேறெவ்வித எண்ணங்கொண்டும் கூறவில்லை.

ஆனல் ஒரு விஷயம் இருக்கிறது. அதாவது, உலகில் இக்காலத்திலுள்ள தொழில்களில் பாபம் புண்ணியம், நீதி யநீதி யென்பவற்றைக் கவனித்தால் ஜீவிக்கமுடியாத சில தொழில்கள் இருக்கின்றனவெனில், யாவரும் நீதியைக் கவனித்து நடக்காதநிலேயே. யாவரும் நீதியின் வழியாகவே சென்றால் எல்லாம் ஒழுங்காகவும் நீதியாகவுமே நடக்கும். அவ்வாறு நடைபெருததால் நீதி யநீதியாகவும் அநீதி நீதியாகவும் தலை தடுமாறித் தட்டழிகிறது. இனி அறிவு விளக்கமின்றி அநீதங்களைச் செய்து ஜீவிக்கும் துஷ்டர்களுடைய சரிதையைத் தொடர்ந்து செல்வோம்.

சீனக்கானகிய சங்கிலி வீட்டின் மச்சு அறையிலிருந்து கண்ணாடிகளின் மூலமாய்ச் சங்கரதாஸின் அறை

யில் நடக்கும் விவகாரங்களைக் கவனித்துக்கொண்டே யிருக் கையில் தெருக்கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டு உற் றுக் கேட்டான். முதலில் பலமான சத்தமும், பிறகு இரண்டு மெதுவான சத்தமும், அதன் பின் இரண்டு கெட்டி யான சத்தமும் கேட்டன.

இப்படிக் கதவைத் தட்டுவது ஒரு அறிகுறி. அது முன்னாடியே அவர்களுக்குள் ஏற்பாடு செய்துகொள்ளப் பட்டது. ஆகையால் வந்து கதவைத் தட்டுவது தங்கள் எஜமானாகிய விபாங்கனே யென்று சங்கிலியுணர்ந்துகொண் டான். அவன் உடனே மிக்க ஆவலோடு ஓடிவந்து கத வைத் திறந்தான்.

முன்னே சங்கு பாய்ந்து உள் நுழைந்தான். அவன் பின்னால் விபாங்கனும் ஆகாயவிமானியாகிய ஜகநாதனும் சென்றார்கள். விபாங்கன், வெளிக் கதவு மூடப்பட்டதே சங்கரதாஸ் எங்கேயிருக்கிறான் இங்குதான் இருக்கிறானோ என்று சங்கிலி என்பவனைக் கேட்டான்.

சங்கிலி:—"ஆம் எஜமானே. இங்கேதான் இருக்கிறான்" என்று கூறிவிட்டு அவர்களை மேலிருக்கும் சாளரத்தரு கில் அழைத்துச் சென்றான். அங்கு சென்றதும் பாருங்கள் என்று தூரதிருஷ்டிக் கண்ணாடியை யெடுத்து அவர்களிடம் அளித்தான்.

அவர்கள் அனைவரும் அதை வாங்கி ஒவ்வொருவராகப் பார்த்தார்கள். அதன் பின் விபாங்கன் "இன்று அவன் எங்கே சென்றிருந்தான் ?" என்று வினவினான்.

சங்கிலி:—"அவனும் அந்த வெள்ளைப் பெண்ணாகிய சந்திரா பாயென்பவளும் சாத்தான் தீவிலுள்ள கோட்டைக் குச்சென்று அங்கிருக்கும் லெப்டினென்ட் வேலப்பன் என்பவனோடு சம்பாஷித்துக்கொண் டிருந்தார்கள்.

நாளைக்குக் காலை அந்த லெப்டினென்ட் இங்கு வரப் போகிறான். அவன் வெடிக்கும் ஒரு மருந்தைப் பற்றி இங்கு பிரயத்தியட்சமாய்க் காண வரப்போகி றான்'' என்றான்.

வெடிக்கும் மருந்து என்றதே விபாங்கன் திடுக்கிட்டுத் தன் பக்கத்தி லிருக்கும் ஜகநாதனை யுற்று நோக்கினான். அதன் பிறகு அவன் தன் ஆட்களை யருகிலழைத்து "இருக் கட்டும், எனக்குள் ஒரு யோசனை யிருக்கிறது. நீங்கள் மட்டும் ஒவ்வொருவரும் நான் கூறுகிறபடி நடந்துகொள் ளுங்கள்'' என்று அவர்களுக்கு ஒவ்வொரு வேலையை நிய மித்தான். தன் தந்திரமான ஆலோசனை யெப்படியும் நிறைவேறுமென்பது அவனுக்குள் நிச்சயம்.

18—வது அத்தியாயம்.

அன்றிரவு சாத்தான் கோட்டையில் எல்லாம் நிர்ச்ச தடியாயிருந்தது. பெரிய தொழிற்சாலைகளில் இருப்புப்பாதை போடப்பட்டிருப்பதை நம்மவர் சாதாரண மாகப் பார்த்திருக்கலாம். ஏனெனில் அத்தகைய இடங் களிலிருந்து அடிக்கடி அபரிமிதமான 'சாமான்கள் வெளி யனுப்பப்படும், உள்ளுக்கும் கொண்டுவரப்படும். இதனால் இருப்புப்பாதை கம்பெனியாருக்கு நல்ல இலாபம் இருக் கிறது. அதனால் அவர்கள் தங்கள் ஸ்டேஷன்களிலிருந்து, ஒருமைல் இரண்டுமைல் தூரமிருந்தாலும் இத்தகைய தொ ழிற்சாலைக்குக் கிளைப்பாதை ஸ்தாபித்து போக்கு வரவுக்கு வசதி யேற்படுத்திக்கொள்கிறார்கள்.

அவ்வாறே யிக்கோட்டையிலும் இரயில் பாதை போடப்பட்டிருந்தது. அச்சமயம் சில வெடிக்கருவிகள்

முதலிய யுத்த தளவாடங்களை யேற்றிச்செல்வதற்காக ஒரு வண்டித்தொடர் அங்கு வந்திருந்தது. அவ்வண்டிகளில் தளவாடங்கள் ஏற்றப்பட்டு அவை புறப்பட்டுப்போக ஆயத்தமாய் நீராவி எந்திர வண்டியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தன.

ஒரு போர்வீரன் அவ்வண்டித் தொடரின் முன் நின்று பாராகொடுத்துக்கொண் டிருந்தான். அச்சமயம் நாணயமாக உடையணிந்த ஒரு வசீகரமான பெண் அங்குவந்து அவனை நோக்கி "இங்கு வண்டிகளிருக்கும் இடம் எங்கேயிருக்கிறதென்பதைக் காட்டக்கூடுமா?" என்றாள்.

உண்மையில் அவள் வண்டிகளிருக்குமிடத்தைக் கேட்க அவனிடம் வந்தவளல்ல. அவனைமயக்கித் தன்வலையில் போட்டுக்கொண்டு தன்காரியம் நிறைவேறுமட்டும் அவன் தன் வேலையைக் கவனிக்காதபடி அவனை மயக்கவே வந்தாள்.

சாதாரணமாய் எந்தக்கன்னிகையும் அன்னியபுருடனிடம் தாராளமாய் பேசலாம் என்ற தகாத ஆசாரம் வழக்கத்திலிருப்பதால் மேல்நாட்டுப் பெண்கள் அச்சம் மடம் நாணம் என்பதின்றிச் சாதாரணமாய் நடந்துகொள்கிறார்கள். கன்னிகைகள் அவ்வாறு நடக்கும்போது வாலிபர்கள் சுலபத்தில் மயங்கி நெறிதவறி நடப்பது இயற்கை. பெண்களே யப்படி நடந்துகொள்ளும்போது ஆடவர்களுக்கிருக்கும் இயற்கையான அச்சம் அடியோடு போய்த் துணிகரம் உண்டாய் விடுகிறது. அதன்பின் ஸ்திரீயின் கற்பும் ஆடவனது நன்னெறியும் பறந்துபோய் விடுகின்றன.

இப்போது அப் பாராக்காரனை வண்டிக ளிருக்குமிடத்திற்கு வழிகேட்டவள் நமது தளுக்குத் தங்கமே. இவள் முன்பு சுப்பையாபிள்ளையின் கூட்டத்தில் சேர்ந்திருந்

தவள். இப்போது அக்கூட்டமே விபாங்கனிடம் வந்துவிட்ட தால் இவளும் வந்துவிட்டாள். அவள் வண்டியிருக்குமிட மெங்கே யென்று கேட்கும்போதே அப் போர்வீரனுக்குக் கண்சாடை முதலிய மயக்கும் சமிக்கைகளைக் காட்டினுள். அவன் இவள் மாயவலையில் வீழ்ந்துவிட்டே யிருப்பான். ஆனால் அழகில் இவளுக்குக் குறைவில்லாத இன்னொரு பெண்மேல் அவன் காதல்கொண்டிருப்பதால் இவள் மயக் கில் சிக்காமல் "அதோ அவ்வழியே செல்" என்றுமட்டும் கூறிவிட்டான். அவள் "சீ! நீ ஒரு ஆண்பிள்ளையா!" என்று கூறிக்கொண்டே சென்றுள். போர் வீரன் தன் துப் பாக்கியை யெடுத்துக்கொண்டே முன்னும் பின்னும் திரிந் துகொண்டே பாராகொடுக்கத் தொடங்கினன். தளுக்குத் தங்கம் வெறுப்போடு அவனை நோக்கிவிட்டு வண்டிகளிருக் கும் திக்கை நோக்கிச்சென்றுள்.

இவள் விபாங்கன் கூட்டத்தைச் சேர்ந்தவள். இவளும் சங்கிலியும் ஒரு காரியத்திற்காக அங்கு வந்தார்கள். இவள் பாராக்காரனை மயக்கவேண்டுமென்றும், அச்சமயம் சங்கிலி தாங்கள் எண்ணிய காரியத்தை முடிக்க வேண்டுமென்றும் அவர்கள் ஏற்பாடு செய்துகொண்டார்கள்.

அதன்படி தளுக்குத்தங்கம் பாராக்காரனிடம் பேசிக் கொண் டிருக்கையில் சங்கிலி தான் ஒளிந்திருந்த விடத்தை விட்டு வண்டிகளின் நிழலிலேயே மறுபக்கம் சென்று விட் டான். அங்கிருந்த வண்டித்தொடர்களில் இரண்டாவது வரிசை வண்டித்தொடருக்கும் முதல் வண்டித்தொடருக் கும் இடையில் துப்பறியும் இரகசியப் போலீஸ் இலா காவைச் சேர்ந்த ஒருவன் உட்கார்ந்து சுருட்டு பிடித்துக் கொண்டிருந்தான்.

அவன் தன்தொழிலில் வெறுப்புடையவன். அப்படிப் பட்டவன் என்ன அக்கரையோடு வேலையைக் கவனிப்பான்

என்பதை நாமே யறிந்துகொள்ளலாம். அவன் சற்றும் ஜாக்கிரதையின்றிச் சுருட்டுப் பிடித்துக்கொண்டு அங்கு உட்கார்ந்திருந்தான். சினக்காரனுகிய சங்கிலி முன்வரிசை வண்டியின் நிழலில் மறைந்து வந்து இவன் அங்கு உட்கார்ந்திருப்பதைக் கண்டதும் தன்னிடம் இருந்த தடியால் ஓங்கி அவன் மண்டைமேல் அடித்து அவனைத்தரையில் வீழ்த்தி விட்டான்.

அத்துப்பறிபவன் தான் என்னத்திற்காக அங்கு வந்திருப்பதென்பதில் அக்கரையில்லாதவனுப்த் தன் கடமையை யலட்சியம்செய்து அசட்டையாய்ச் சுருட்டுப் பிடித்துக் கொண்டிருந்ததால், சங்கிலி அவன் யாரென்றறியாவிடினும் தன்காரியத்திற்கு இடையூறாக விருக்கிறுனென்றெண்ணி மெதுவாய் அவன் பின்னுல்சென்று தடியாலடித்து வீழ்த்தி விட்டான். துப்பறிபவன் தன் குற்றத்திற்கு அங்கேயே தண்டனை யடைந்தான்.

பாராக்காரனே முன் வரிசையிலிருக்கும் வண்டித் தொடர் முன் பாராகொடுத்துக்கொண் டிருக்கிறுன். சங்கிலி கீழே வீழ்ந்தவனுடைய ஜேபியில் கையிட்டுப் பார்த்தான். அதில் ஒரு சாவிக்கொத்திருந்தது. சங்கிலி அதை யெடுத்துக்கொண்டு பாராக்காரன் சற்று எட்டப்போகும் சமயம் பார்த்து ஒரு வண்டியின் கதவைத் திறந்து உள்ளே சென்று அதை மூடிக்கொண்டான்.

வண்டிக்குள் சென்ற சங்கிலி தன்னிடமிருந்த கள்ள இலாந்தரை எடுத்து அதன் வெளிச்சத்தில் பார்த்து வண்டியிலிருந்த புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட வெடி குண்டுகளிலும், கிழெறியும் அம்புகளிலும் தான் சுமக்கக்கூடிய அளவு மூட்டைகட்டி யெடுத்துக்கொண்டு வண்டியிலிருந்து வெளிப்பட்டான். பிறகு தான் வந்தபடியே, அங்கிருந்த

வண்டித் தொடர்களின் பின்பக்கமுள்ள நிழலிலேயே நடந்து அப்பிரதேசத்தை விட்டு வெளிப்பட்டான்.

* * * *

இச்சம்பவம் நடந்த மறுநாள் இரவு பனிரண்டு மணியிருக்கும். அச்சமயம் சங்கரதாஸும் வரதாஸிங்கும் இரசாயன சாலையிலிருந்து புறப்படப்போகிறார்கள். வரதாஸிங் தீபங்களை யணைக்கப்போனான். சங்காதாஸ் தட்டென்று அவன் காத்தைப் பிடித்துக்கொண்டு நில்நில் என்றான்.

அச்சமயம் சங்கரதாஸ் முகத்தில் உண்டான மாறுதலாலும் அவன் பார்வையாலும் அவன் மேலே உண்டாகும் ஏதோ சத்தத்தைக் கேட்கிறான் என்று தெரிந்தது. சங்கரதாஸ் "வரதாஸிங்! உற்றுக்கேள்" என்றான். உடனே வரதாஸிங்கும் கவனமாகக்கேட்டான். தங்கள் தலைக்குமேல் ஏதோ ஒரு ஆகாய விமானம் பறப்பதுபோன்ற சத்தம் கேட்டது.

சங்கரதாஸ் தானே தீபங்களைச் சட்டென்றணைத்து விட்டுத் தன்னிடமிருக்கும் கண்ணாடிக் கருவியை யெடுத்துக் கொண்டுபோய் சாளரத்தின் வெளியில் நீட்டிப்பார்த்தான். பிறகு அக்கண்ணாடியை மெதுவாய் வீட்டின் மேல் தளத்தை நோக்கித் தூக்கினான். அப்போது தளத்தின்மேல் பெரிய வட்டமான கோடு போடப்பட்டிருந்தது. அது வெள்ளை நிறத்தில் போடப்பட்டிருந்தது.

வரதாஸிங் அதைக் கண்டதும் மிக்க வியப்படைந்து "இதென்ன அர்த்தம்?" என்றான். சங்கரதாஸ் சற்று நேரம் ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான். பிறகு திடீலென்று தன் கரங்களைத்தட்டி "ஹா! ஹா! தெரிந்து கொண்டேன்" என்றான். வரதாஸிங் பின்னும் வியப்படைந்து "என்ன அது? என்ன அது?" என்றான்.

சங்கரதாஸ் "சீக்கிரத்தில் பிரத்தியட்சமாய்க் காண்பாய். இப்போது நீ துரிதமாக ஒரு வேலை செய்யவேண்டும். அதாவது அதோ அந்த மூலையிலிருக்கும் கருப்பூரத் தைலத்தை யெடுத்துச் சென்று அந்த வட்டமான கோட்டை அடியோடு கொஞ்சங்கூடத் தெரியாமல் துடைத்துவிடு. தைலம் போதாவிடின் இந்த அலமாரியில் ஒரு புட்டி நிறைய இருக்கிறது வந்து வேண்டியதை யெடுத்துக்கொண்டு போ" என்றான்.

வரதாஸிங் அவன் கூறியபடியே தைலத்தையும் ஒரு பூசுகோலும் எடுத்துச் சென்றான். அவன் மேல் தளத்திலிருந்த வட்டத்தைத் துடைத்துக்கொண் டிருக்கையில் சங்கரதாஸ் ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் வெள்ளைச் சாயமும் ஒரு பூசுகோலும் எடுத்துக்கொண்டு துரிதமாய் எதிர்வாடையிலிருக்கும் பழைய கிடங்கின் பின்பக்கம் சென்றான். அதில் தான் விபாங்கன் ஆட்கள் இருந்துகொண்டு சங்கரதாஸைக் கவனித்து வருகிறார்கள். அது இரண்டடுக்கு மாடிவீடு. முன்பு விபாங்கன் ஆட்கள் சாளரத்திலிருந்து கண்ணாடி மூலமாய்ச் சங்கரதாஸின் நடக்கைகளைக் கவனித்துக்கொண்டிருந்த அறை இரண்டாவ தடுக்கிலிருக்கிறது. அது சங்கரதாஸிருக்கும் இரசாயனசாலை யறைக்கு நேராக அதே மட்டத்தில் இருக்கிறது.

சங்கரதாஸ் அக்கட்டிடத்தின் பின்பக்கம் நின்று இரண்டொரு நிமிடங்கள் நாற்புறங்களிலும் நோக்கினான். அதன் பக்கத்தில் ஒரு வீடிருந்தது. அதன் ஓரமாக மதில் சுவர் இருந்தது. சங்கரதாஸ் சாயமிருக்கும் ஏனத்தைத் தோளில் மாட்டிக்கொண்டு அச்சுவரின்மே லேறி அதிலிருந்து அவ்வீட்டின் தளத்தின்மேலேறி, அங்கிருந்து சுலபமாய் சீனுக்காரர் இருக்கும் வீட்டின் தளத்தின்மேலேறிப் பார்த்தான். இரசாயன அறை யிருக்கும் கட்டிடத்தின் தளமும் தான்

நிற்கும் தளமும் ஒரேமட்டத்தில் இருந்தன. அதோடு விஸ்தீரணத்திலும் ஒரே அளவாகத் தோன்றின. அவன் ஆலசியம் செய்யாமல் தன் வீட்டின்மேல் போடப்பட்டிருந்த வட்டத்தைப் போலவே அத்தளத்தில் ஒருவட்டம் வெள்ளைச் சாயத்தால் போட்டுவிட்டு, ஏறிய வழியே யிறங்கிச் சென்றான்.

பிறகு சங்கரதாஸும் வரதாஸிங்கும் தங்கள் வாசஸ்தலத்திற்குச் சென்றார்கள். வரதாஸிங் தன் வரையில் நடந்த சம்பவத்தைப்பற்றி கவனிக்கவில்லை. மறுநாட்காலை லெப்டினென்ட் வேலப்பனும் சந்திராபாயும் இரசாயன சாலைக்கு வருவார்களாதலால் அவர்களைச் சந்திப்பதற்காக சங்கரதாஸும் வரதாஸிங்கும் அதிகாலையிலேயே புறப்பட்டு இரசாயனசாலைக்குச் சென்றார்கள்.

அவர்கள் வந்துசேர்ந்த அரைமணி நேரத்திற்குள் லெப்டினென்ட் வேலப்பன், சந்திராபாய், அவளுடைய அத்தையாகிய ஜானகியம்மாள், மூவரும் இரசாயனசாலைக்கு வந்தார்கள். சங்கரதாஸும் வரதாஸிங்கும் அவர்களைச் சந்தோஷத்தோடும் பட்சத்தோடும் வரவேற்று உபசரித்ததும், லெப்டினென்ட் வேலப்பன்,

"சங்கரதாஸ்! ஒரு ஆச்சரியமான சம்பவம் இரவு நடந்தது. கோட்டையில் இரவு ஒரு களவு நடந்தது. கோட்டையில் என்றால் கோட்டைக்குள்ளல்ல. அது முடியாத காரியம். வெளி முற்றத்தில் சாமான் ஏற்றிச் செல்ல வந்திருந்த இரயில் வண்டித் தொடரில் களவு நடந்தது." என்றதே.

சங்கரதாஸ் ஒருவித முகமலர்ச்சியோடு நிமிர்ந்து "என்ன? என்ன பொருள்கள் களவாடப்பட்டன?" என்று கேட்டான்.

வேலப்பன் "நான் புதிதாகக் கண்டுபிடித்த வெடி குண்டுகள் சிலவும், கிழெறியும் அம்புகளில் சிலவும் களவு போயிருக்கின்றன. அந்த அம்புகள் ஆகாய விமானத்தி லிருந்தபடி கீழெறிய உபயோகப்படும்" என்றான்.

இதைக் கேட்டதும் கிருஷ்ணாவின் பார்வை சட்டென்று மேல் தளத்தை நோக்கியது. அவன் "உம். சரிசரி நான் வந்து அந்த இடத்தைப் பார்வையிடவேண்டும் போலும். யார் வந்து களவாடியதென்பதைப்பற்றி உனக்கு ஒன்றும் புலப்படவில்லையோ?" என்றான்.

வேலப்பன்:—"ஒரு சங்கதியும் புலப்படவில்லை" என்றான்.

சங்கரதாஸ்:—"எவ்வளவு வெடி குண்டுகள் எடுத்துச் சென்றார்கள்?"

வேலப்பன்:—"என்? ஒரு பெரிய கட்டிடத்தை யடியோடழித்துவிடக்கூடிய அவ்வளவு எடுத்துச்சென்றிருக்கிறார்கள்" என்றான்.

அச்சமயம் சங்கரதாஸ் ஏதோ சத்தத்தைக் கேட்டு யாவரையும் நோக்கி "ஹா! இதைக் கவனியுங்கள்" என்றான்.

யாவர்க்கும் ஏதோ ஒரு அபூர்வமான சத்தம் மேலிருந்து கேட்பதுபோல் தோன்றியது. அது ஒரு அசாதாரணமான சத்தம். சங்கரதாஸ் எப்படியோ அது இன்னதென்று உண்மையை யறிந்து கொண்டான். அதனால் அவன் துள்ளி யெழுந்து பாய்ந்து போய்ச் சாளரத்தினருகில் நின்று ஆகாயத்தை யுற்று நோக்கினான்.

அவன் இரண்டொரு விநாடிகளே அவ்வாறு நோக்கியதும் "ஆ! வந்து பாருங்கள்! பாருங்கள்!" என்று கூவினான். உடனே லெப்டினெனன்ட் வேலப்பன், சந்திராபாய், அவள் அத்தை, வரதாஸிங், யாவரும் ஓடிப்போய் மிக்க வியப்போ

டும் ஆவலோடும் வானத்தைத் நோக்கினார்கள். அச்சமயம் நகரத்தின்மேல் ஒரு ஆகாய விமானம் பறந்து செல்வதைக் கண்டார்கள்.

உடனே எல்லா விஷயங்களும் வரதாஸிங்கின் மனதில் திடீலென்று புலப்படுவிட்டன. கோட்டை மைதானத்தி லிருந்த இரயில் வண்டியிலிருந்து வெடி குண்டுகள் களவா டப்பட்டது, தங்கள் வாசஸ்தலத்தின் மேல் தளத்தில் வட்ட மான குறி போடப்பட்டது, அதைச் சங்கரதாஸ் துடைத்து விடச் சொன்னது, சங்கரதாஸ் இதன் அர்த்தத்தைப் பிரத்தி யட்சமாய்க் காண்பாய் என்று தனக்குக்கூறியது, இப் போது ஆகாயவிமானம் பறப்பது யாவும் ஏககாலத்தில் அவன் மனதிலுதித்ததே, அவன் புத்திக்கு ஒருவிதமான உண்மை புலப்பட்டதும், அவனுக்குப் பெருந்திகிலுண்டா யிற்று.

அவன் மிக்க பீதியோடு "சங்கரதாஸ்! அவர்கள் ஆகா யக் கப்பலிலிருந்து வெடிகுண்டு போட்டு நமது வாசஸ்தலத் தோடு நம்மை யடியோடழித்துவிட முயல்கிறார்கள். நாம் இப்போதேனும் தப்பித்துக்கொள்ள மார்க்கமில்லையா? ஓ கடவுளே!" என்றான்.

சங்கரதாஸ் தலை யசைத்து "பயப்படாதே. பொறுமை யோடு எதிர்வாடையில் நமது பகைவர் இருந்து நம்மை வேவு பார்க்கும் அப்பழைய கட்டிடத்தை நோக்கிக் கொண்டிரு. என்ன நடக்கிறதென்று பார்" என்றான். இச்சம்பாஷணை யிவர்கள் இருவருக்குமே இரகசியமாகக் குசுகுசு வென்று நடந்தது.

சங்கரதாஸ் உடனே மற்றபேரையு மழைத்து எதிர் வாடையிலிருக்கும் அக்கட்டிடத்தைக் காட்டிப் பார்க்கும்படி கூறினான். யாவரும் மிக்க ஆவலோடு அக்கட்டிடத்தையே

யுற்று நோக்கியபடி யிருந்தார்கள். அதே சமயம் விபாங்கன் ஆளாகிய சங்கிலி அக்கட்டிடத்தின் மேல் மாடியிலிருக்கும் அறையின் சாளரத்தில் நின்று கண்ணாடியின் மூலமாய் சங்கரதாஸ் முதலியவர்களிருக்கும் இரசாயன சாலையறையை நோக்கிக் கொண்டிருக்கிறான்.

சங்கிலி தங்களை நோக்குவதை யிவர்கள் கவனிக்கவில்லை. அவன் இவர்கள் இருக்கும் கட்டிடத்தின் மேல் வெடிகுண்டு விழுந்து அவர்கள் அக்கட்டிடத்தோடழியும் காட்சியைக் கண்டு சந்தோஷமடைய மிக்க ஆவலோடு எதிர் பார்த்துக்கொண் டிருக்கிறான். அறிவிலியாகிய அம்மூடனுக்கு, எங்கும் நிறைந்த பரிபூரண வஸ்து ஒன்று யாவற்றையு மறிந்துகொண்டிருக்கிறதென்றும் அதன் எண்ணமே நிறைவேறு மென்றும் உணரும் ஆற்றலில்லை. இன்னும் இரண்டொரு விநாடிகளில் தன்கதி யென்னுகுமென்பது அவனுக்குத் தெரியாமல் சங்கரதாஸ் முதலியவர்களுக்கு நேரும் பிராணபத்தைக் கண்டு சந்தோஷப் படலாமென்று ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறான்.

இதற்கிடையில் ஆகாய விமானம் செலுத்தும் ஜகநாதன் தன் ஆகாய விமானத்தைச் செலுத்திக்கொண்டு நகர ஓரத்திலிருந்து நகரத்தின்மேல் பறந்து வந்தான். அவன் சங்கரதாஸ் வசிக்கும் பிரதேசத்தில் வரும்போது மிக்க அக்கரையோடு ஜாக்கிரதையாய்க் கீழே பார்த்துக்கொண்டே சென்றான். தான் இரவு வெள்ளை நிறத்தில் வட்டமாகக் குறிபோட்ட வீட்டின் தளத்தைப் பார்த்துக்கொண்டே சென்றான்.

கடைசியில் அவன் அவ்வட்டமான குறியைக்கண்டான். தான் போட்ட அதே யளவு வட்டமான வெள்ளைக் குறியைக் கண்டான். அவன் குறிபார்ப்பத்தில் மிகக் கெட்

டிக்காரன். ஆகாய விமானத்திலிருந்தபடி தான் போட்ட தென்று அவன் கருதிய அவ்வெள்ளை வட்டத்தைச் சரியாகக் குறிபார்த்து அதன் மத்தியில் விழும்படி வெடிகுண்டை யெறிந்தான். அந்த வெடிக்குண்டு குறிதப்பாமல் நேராக அந்த வட்டத்தின் மத்தியில் போய் வீழ்ந்தது.

சங்கரதாஸின் அறையின் மேல் வீழ்ந்து அக்கட்டிடத்தையும் அதிலுள்ளவர்களையும்—சங்கரதாஸையும் வரதாஸிங்கையும்—அதிலும் அச்சமயம் இருந்த நிலைமையின்படி, சங்கரதாஸ், வரதாஸிங், இவர்களோடு சந்திராபாய் அவள் அத்தையாகிய ஜானகியம்மாள், லெப்டினென்ட் வேலப்பன் அனைவரையும் அடியோடழிக்க வேண்டிய அந்த வெடிகுண்டு, அந்த வெள்ளை வட்டங்களாகிய குறிகள் சாமர்த்தியமாக மாற்றப்பட்டதால் எதிர் வாடையிலிருந்த சீனக்காரர் இருக்கும் வீட்டின்மேலேயே வீழ்ந்தது. "இது தன் வினை தன்னைச் சுடும்" என்ற ஆன்றோர் வாக்கின்படி முடிந்தது.

அக் கட்டிடம் உடனே அஸ்திவாரத்தி லிருந்து தத்தளித்ததுபோல் தோன்றியது. அதன் மேற்பாகம் முழுமையும் அடியோடு பொடிப்பொடியாய் போய்விட்டதாகத் தெரிந்தது. அதன் சாளரத்திலிருந்து சங்கரதாஸின் இரசாயன அறையைக் கவனித்துக்கொண்டிருந்த சங்கிலி என்னவிதமானான் என்று தெரியவில்லை. ஏனெனில் மேல் மாடி முழுமையும் இருந்தவிடமே தெரியவில்லை.

19-வது அத்தியாயம்

மேற்கண்ட சம்பவங்கள் நடந்து சுமார் ஒரு மணி நேரங்கழிந்தது. அப்போது சங்கு தன் எஜமானுகிய விபாங்கன் இருக்கும் இரகசியவிடத்திற்குச் சென்ருன். தன் எஜமான் முன் செல்லும்போது சங்குக்கு மிக்க பீதியாகவே யிருந்தது. அவன் நடுக்கத்தோடு விபாங்கன் எதிரிற் சென்று,

"எஜமானே! மறுபடி அந்த வெள்ளைப்பேயாகிய சங்கரதாஸ் நம்மை அபஜெயமடையச் செய்து விட்டான்..." என்ருன்.

அம்மொழிகள் விபாங்கன் செவிகளில் நாராசங்காய்ச்சி விட்டது போன்றிருந்தன. அவன் அடக்கொணுத கோபத்தோடும் வெறுப்போடும் சீறி யெழுந்து "என்ன? மறுபடியுமா? இத்தகைய சாமார்த்தியமான செய்கையிற் கூடவா அவன் நம்மைத் தோற்கடிக்க வல்லவன்? எப்படி யவன் இதிலிருந்து தப்பித்துக்கொண்டான்?" என்ருன்.

அச்சமயம் விபாங்கன் முகத்திலுண்டான இரத்தம் ஒழுகுவதுபோன்ற சிவந்த கோபக்குறியைக் கண்ட சங்கு மிக்க பீதியோடு, "எஜமானே! அவன்—அக்கள்ளப் பயல் நம்மைத் தோற்கடித்துவிட்டான். அவன் எப்படியோ நமது ஆகாய விமானியாகிய ஜகநாதன் தன் வாசஸ்தலத்தின் தளத்தின்மேல் போட்டக் குறியை யறிந்துகொண்டு, அக்குறியைப் பெரும்பாலும் கலைத்துவிட்டு, நமது ஆட்களிருக்கும் அப்பழைய கிடங்குக் கட்டிடத்தின் தளத்தின்மேல் அதே மாதிரி வட்டக்குறியைப் போட்டுவிட்டான். அதனுல் காலையில் ஆகாய விமானத்தில் வந்த ஜகநாதன் தான் போட்ட வீடுதான் இது என்று எண்ணிக்கொண்டு அதன்

மேல் வெடிகுண்டைப் போட்டுவிட்டான். அவ்வீடு அழிந்து போனதோடு அச்சமயம் சங்கரதாஸின் வாசஸ்தலத்தை நோக்கிக்கொண் டிருந்த நமது சங்கிலியும் அக்கட்டிடத்தில் அகப்பட்டு மடிந்துபோனுன்'' என்ருன்.

விபாங்கன் முகம் கறுத்து ஆவேசம் கொண்டவன் போல் "அடடா! நமது சங்கிலிபோய்விட்டானு! அப்படியா யின். அவன் உயிருக்குப் பதில் யார் உயிரையேனும் வாங் கியே தீரவேண்டும்'' என்ருன்.

தன் எஜமான் மிக்க கோபமான நிலைமையிலிருப்பதைக் கண்டதே சங்கே நடுக்கங்கொண்டு நின்ருனெனில் நாம் மற்றபேரைப் பற்றி யதிகமாகக் கூறவேண்டியதில்லை. சுமார் அரைமணி நேரம் இருவரும் ஒன்றும் பேசாமல் மௌன மாக விருந்தார்கள்.

சங்கு தன் வரையில் மிக்க தந்திர சாமார்த்தியமுடைய பெரிய கள்ளனே யெனினும் விபாங்கன் முன், ஒரு பெரிய வேங்கையின் முன் அடங்கி யொடுங்கி நிற்கும் குள்ளநரி போன்றவனேயாகும். ஆகையால் இப்போது நேர்ந்த தோல் விக்காக விபாங்கன் கோபம். எங்கே நம்மேல் விழுமோ வென்று அவன் மிக்க பீதியோடு ஒரு புறமாக நின்றிருந் தான்.

விபாங்கன் அடக்கொணுத கோபத்தோடு தன் எதிரி களின்மேல் எவ்விதமாக வஞ்சம் தீர்த்துக்கொள்ளலாம், என்று ஆழ்ந்த சிந்தனையி லிருந்தான்.

அச் சமயம் ஒரு வேலைக்காரன் அறைக்குள் வந்து விபாங்கனை நோக்கி "எஜமானே! ஆகாய விமானியாகிய ஜகநாதன் தங்களைக்காண வந்திருக்கிருர்'' என்ருன்.

விபாங்கன் முன்னமே தன் அடங்காத ஆத்திரத்தை யார்மேல் காட்டலாமென்று மனக்கொதிப்போடிருக்கிருன்.

வேலைக்காரன் கூறியதைக் கேட்டதே, ஆத்திரத்தோடு "ஹா! அந்த ஆகாய விமானிப்பயல் வந்தானா? சீக்கிரம் அவனை யிங்கு அழைத்துவா" என்றான்.

ஜகநாதன் தான் நடு இரவு வந்து வட்டமான வெள்ளைக் குறிபோட்ட கட்டிடத்தைப் பார்த்துக் குறி தவறாமல் குண்டு போட்டான். அக்கட்டிடம் பொடிப் பொடியாய் அழிந்ததைக் கண்ணாற்கண்டான். அதனால் அதில் அச்சமயம் இருந்தவர்களும் விண்ணுலகடைந்தார்களென்பது நிச்சயமே யென்று கருதிக் கொண்டான். இனி விபாங்கன் நமக்களிக்க வேண்டிய பரிசைப்போய் வாங்கிக்கொள்ள வேண்டியதே யென்று அங்கு வந்தான். அவன் சந்தோஷமான புன்னகையோடு விபாங்கன் முன் வந்தான்.

ஆனால் பாபம் அவன் எதிர் பார்த்தபடி அவனை யாரும் சந்தோஷமாக நல்வர வேற்கவில்லை. அதற்கு மாறாக விபாங்கனும் சங்கும் ஆவேசங் கொண்டவர்கள் போல் சிவந்த கண்களோடு அவனை விழுங்கி விடுபவர்கள்போல் கண்களை உருட்டி நோக்கினார்கள். அவன் தட்டென்று நின்றான். பிறகு விபாங்கனை நோக்கி "என்ன சங்கதி?" என்றான். சங்கு "ஏன்? நீ எங்கள் ஆள் இருந்த வீட்டையே யழித்து விட்டாய்" என்றான்.

ஜகநாதன் "இல்லை யில்லை. நான் வட்டத்தைச் சரியாய்ப் பார்த்தே போட்டேன். வெடிகுண்டு அவ் வட்டத்தின் மத்தியில் வீழ்ந்ததையும் கண்டேன்" என்றான்.

விபாங்கன் தனக்கிருக்கும் கோபத்தால் எதிரில் மேஜை மேலிருந்த ஈட்டியைக் கையால் புரட்டிக்கொண்டும் சந்தேகப் பார்வையாய் இவனைக் கொன்றுவிடலாமா வேண்டாமா என்று எண்ணுபவன்போல் ஜகநாதனை நோக்கிக்கொண்டிருந்தான். ஜகநாதன் அதைக்கண்டு பீதியடைந்து விட்டான்.

உடனே வேண்டிக் கொள்பவன்போல் விபாங்கனை நோக்கி "அந்தச் சங்கரதாஸ் தன் வீட்டின்மேல் இருந்த வட்டத்தைத் துடைத்து உங்கள் ஆள் இருந்த வீட்டின் மேல் அதே மாதிரி வட்டம்போட் டிருக்கவேண்டும். அப் படிச் செய்தேதான் அவன் தப்பித்துக்கொண் டிருக்கிறான். வேறு மார்க்கமேயில்லை. இது தவறிவிடினும் வேறு வழி யிருக்கிறது. அதில் அவன் தப்பமுடியாது" என்றான்.

அம்மொழிகளைக் கேட்ட விபாங்கன் ஈட்டியை எடுத்து மேஜைக்குள் வைத்து விட்டு "எப்படி?" என்று ஜகநாதனைக் கேட்டான். பிறகு இருவரும் சற்று நேரம் சம்பாஷித்தார் கள். விபாங்கன் முகத்தில் சந்தோஷம் தோன்றியது. உட னே இருவரும் வெளியில் புறப்பட்டார்கள். சங்கும் கூடச் சென்றான்.

ஜகநாதன் நகரத்தின் மேல் பாகத்தில் தூரமான ஒரு இடத்திற்கு அவர்களை யழைத்துச்சென்றான். அங்கே சோம நாதன் என்ற ஒரு அன்னிய நாட்டான் ஒரு சிறு எந்திர சாலை வைத்துக்கொண் டிருக்கிறான். ஜகநாதன் அந்த விடத் திற்கு விபாங்கனையும் சங்கையும் அழைத்துச் சென்றான். சோமநாதன் புதிதாகவும் எந்திரங்களைக் கண்டுபிடிக்கச் சக்தியுடையவன்.

இவர்கள் அங்கு செல்லும்போது சோமநாதன் தன் இடத்தி லுட்கார்ந்து வேலை செய்துகொண் டிருக்கிறான். ஜகநாதனைக் கண்டதே யவன் வந்தனமளித்து மூவர்க்கும் மரியாதையாக உபசாரம் செய்து "என்னாலாகவேண்டிய காரியம் ஏதேனுமிருந்தால் செய்ய மிக்க சந்தோஷமுடைய வனாக விருப்பேன்" என்றான்.

ஜகநாதன் "ஆகாய விமானத்தின் எந்திரம் முதலிய வற்றைக் குறித்தவிடத்தில் அசையாது நிறுத்தக்கூடிய சக்தி

வாய்ந்த ஒரு புது எந்திரத்தைக் கண்டு பிடித்திருக்கிரு யன்றோ. தயவுசெய்து அதை யெடுத்துக் காட்டு" என்ருன்.

சோமநாதன் உடனே பெட்டியிலிருந்து அந்த எந்திரத்தை யெடுத்துக் காட்டினுன். ஜகநாதன் அந்த எந்திரத்தின் சக்தியை விபாங்கனுக்குக் காட்டி "இத்தகைய யந்திரம் என் ஆகாய விமானத்தில் வைக்கப்பட்டால் இனி தவறே நேராது" என்ருன்.

சோமநாதன் "ஆகா உன் விமானத்தில் எள்ளளவு கஷ்டமின்றி அதைப் பொருத்தி வைக்கலாம்" என்ருன். விபாங்கன் "சரி நான் இதன் கிரயத்தை யளித்து விடுகிறேன்" என்று மடியிலிருந்து பணத்தை யெடுத்துவைத்தான். சோமநாதன் உடனே தன் ஆளை யழைத்து அந்த எந்திரத்தை யொரு சிப்பமாகக் கட்டச்செய்து அதை ஜகநாதனிட மளித்துவிட்டான்.

* * * * *

விபாங்கன் தன் வீட்டின்மேல் வெடிகுண்டெறிய முயன்றதைக் கண்டதுமுதல் சந்திராபாயைப்பற்றிச் சங்கரதாஸுக்கு மிக்க கவலையுண்டாயிற்று. அவன் சந்திராபாயை ஏரிக்காட்டுக் கருகிலுள்ள இரங்காபுரத்தி லிருக்கும் அவள் சுற்றத்தார் வீட்டிற்கு அழைத்துச் செல்லும்படி வரதாஸிங்குக்குக் கூறினுன். அங்கு சந்திராபாயின் சிற்றப்பனுகிய (சிறிய தாய் புருடன்) வெள்ளைச்சாமிப் பிள்ளையும் அவர் புத்திரி பூங்காவனம் என்பவளும் இருக்கிருர்கள். சங்கரதாஸ் கோட்டையில் நடந்த களவைக் கண்டு பிடிப்பதில் லெப்டினெண்ட் வேலப்பனுக்கு உதவி செய்வதற்காக நகரத்திலேயே தங்கினுன்.

அன்று பிற்பகல் சந்திராபாயும் அச்சமயம் சந்திராபாய் வீட்டில் வந்திருந்த பூங்காவனமும் வரதாஸிங்கும் சந்திராபா

யின் வீட்டிலிருந்து அவளுடைய வண்டியில் புறப்பட்டார்கள். சந்திராபாய் கொஞ்சகாலம் நாட்டில் வேடிக்கையாகக் காலங் கழிக்கலாம் என்று விரும்பித் தன் சித்திரம் எழுதும் கருவிகளை யெல்லாம் கூட எடுத்துக்கொண்டாள். வேலையாளான ஜகநாதன் அச்சாமான்களையும் உடைகளடங்கிய பிரயாணப்பையையும் எடுத்து வந்து வண்டியில் வைத்தான்.

இவர்கள் ஊருக்குச் செல்லும் அமக்களத்தில் வீதியில் சற்று தூரத்தில், வெடி குண்டு விழுந்த வீட்டில் மடிந்த சங்கிலியென்ற சீனுக்காரனுக்குப் பதிலாக இன்னொரு சீனுக்காரன் வந்து நின்றுகொண்டு இவர்கள் காரியங்களைக் கவனித்துக்கொண் டிருப்பதை இவர்கள் உணரவில்லை. அவன் பெயர் சாமு. அவன் இவர்கள் வண்டியில் வந்து ஏறியதும் இவர்கள் கண்களுக்குப் புலப்படாமலே மெதுவாக இவர்க ளிருக்கும் வண்டியை நெருங்கி வந்தான். ஜகநாதன் சாமான்களை வண்டியில் வைத்து விட்டதும் வீட்டிற்குள் போய் விட்டான். சீனுக்காரன் உடனே வண்டியின் பின்பக்கம் வெளியிலுள்ள ஆசனத்தில் ஏறி யுட்கார்ந்துகொண்டான்.

ஆச்சு வண்டி புறப்படவேண்டியதே. சாரதி "என்ன அம்மா? எங்கு ஓட்டவேண்டும்?'' என்றான். சந்திராபாய் "நீ நேராக 42–வது வீதியின் கோடிக்குச் செல். பிறகு அங்கிருந்து எரிக்காட்டிற்குச் சமீபமாக உள்ள வழி யெது வென்று கூறுகிறேன்'' என்றாள்.

சாமு அறியவேண்டியது அவ்வளவே. அவன் உடனே வண்டியினின்றும் நழுவி வீதிவழியே சென்றான். சந்திராபாய் முதலியவர்கள் நகரைக் கடந்து செல்லும் வழி பச்சென்றிருக்கும் புலங்களும், அழகிய தோட்டங்களும் இருபுறங்களிலும் சூழப்பட்டவை யாதலின் அவர்கள் பிரயா

ணம் ஆரோக்கியமாகவும் சந்தோஷமாகவுமே யிருந்தது. இவர்கள் நல்ல பொழுதிருக்கும்போதே இரங்காபுரம் போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

இவர்கள் வந்ததைக்கண்ட பூங்காவனத்தின் தந்தை யாகிய வெள்ளைச்சாமிப் பிள்ளை மிக்க சந்தோஷத்தோடும் அன்போடும் இவர்களை வரவேற்று உபசரித்தார். அவர்கள் இருக்கும் வீடு மிக்க ஆடம்பரமான ஒரு பெரிய மாளிகை யல்லாவிடினும் சுத்தமான அழகிய வீடாக விருந்ததோடு நறுமணம் பொருந்திய நந்தவனத்தால் சூழப்பட்டு மிக்க இரமணீகரமாக விருந்தது. அதனால் சந்திராபாய் அங்கு வந்ததற்காக எப்போதும்போல் மிக்க சந்தோஷமும் திருப்தியுமே யடைந்தாள். ஏன்? யாவருமே அந்த விடத்தைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தார்கள் என்றே கூறத் தகும்.

அங்குப்போய்ச் சேர்ந்ததும், சந்திராபாய் உல்லாச மாய் வெளியில் சென்று உலாவிச் சுகமான காற்றையும் நல்லக் காட்சிகளையும் அனுபவிக்க வேண்டுமென் றெண்ணி, உடனே புறப்பட்டாள். வரதாஸிங் சித்திரப்பட மெழுதும் கருவிகளை யெல்லாம் எடுத்து ஒரு பக்கம் வைக்க ஆயத்தம் செய்தான். சந்திராபாய் அதைக் கண்டு "நான் இப்போதே யிவற்றை யுபயோகிக்கப் போகிறேன்" என்றாள். வரதாஸிங் சற்றுநேரம் தாழ்வாரத்தில் நின்று எதிரிலிருந்த அழகான காட்சியைப் பார்த்துக்கொண் டிருந்தான்.

அச்சமயம் பூங்காவனம் அவனை நோக்கி "நீங்கள் மிக முன்னாடியே வெளியில் புறப்படுகிறீர்களே" என்றாள். வரதாஸிங் "ஆம். சந்திராபாய் இப்போதே புலங்களையும் வனங்களையும் காணப்பிரியப்படுவதால் நான் அவளுக்காக ஆயத்த மாக விருக்கிறேன். நீ சந்திராபாயை யிப்போது காண வில்லை. ஆ! அதோ சந்திராபாயே வருகிறாள்" என்றான்.

சந்திராபாய் உள்ளறையிலிருந்து உலவச் செல்வதற்கும் படம் எழுதுவதற்கும் தகுதியான உடைகளை யணிந்து கொண்டு வரதாஸிங்கும் பூங்காவனமு மிருக்கும் இடத்திற்கு வந்ததும், பூங்காவனத்தை நோக்கி "ஏன்? நீ எங்களோடுகூட வரமாட்டாயோ?" என்றாள்.

பூங்காவனம் "மிக்க வந்தனம். நான் வரமுடியாதென் றஞ்சுகிறேன். தந்தை கணக்குகளைச் சிக்காக்கி விட்டு மிக்க தடுமாற்றத்தி லிருக்கிறார். நான் கூடவிருந்து அவற்றை யொழுங்குபடுத்த வேண்டும். நான் இங்கில்லாமல் எங்கேனும் வெளியில் செல்லும்போதெல்லாம் இந்தத் தொல்லை யேற்படுவது வழக்கமே" என்றாள்.

வரதாஸிங் படம் எழுதும் கருவிகளை யெடுத்துக் கொண்டு முன்னே செல்ல சந்திராபாய் நகைத்துக் கொண்டே யவன் பின்னால் சென்றாள். வரதாஸிங் இத்தகைய விடுமுறை காலத்தை யனுபவித்துக் கொஞ்ச நாட்களாய் விட்டன. ஆதலின் இப்போது சந்திராபாயின் சகவாசத்தில் நிம்மதியோடு வேடிக்கையாகக் காலத்தைக் கழிப்பது அவனுக்கு மிக்க சந்தோஷமாகவே யிருந்தது. ஆனால் தன்கூடச் சங்கரதாஸ் இல்லாதது மட்டுமே அவனுக்கொரு பெருங் குறையாக விருந்தது.

வரதாஸிங்கும் சந்திராபாயும் ஊரைவிட்டு வெளிப்பிரதேசத்தில் கொஞ்சதூரம் சென்றபோது ஒரு இடத்தில் குன்றும் அதன் அருகில் செழுமையான புலங்களும், நறுமணச் சோலைகளும் கண்களைக் கவரத்தக்க காட்சியாக விருந்தன. அங்குச் சென்றதே சந்திராபாய் "ஆ! இது மிக்க நன்றாக விருக்கும். இக் குன்றின் ஓரம், அதோ தெரிகிறதே அந்த விடத்தில் உட்கார்ந்து எழுதவேண்டும்" என்றாள்.

வரதாஸிங் அவ்வாறே யவள் கூறிய இடத்தில் சித்திரம் வரையும் கருவிகளை வைத்தான். அங்கிருந்து தோன்றும்

அழகிய இயற்கைக் காட்சியை சந்திராபாய் படத்தில் எழு
தத் தொடங்கினாள். வரதாஸிங் அவளருகில் நின்று உன்
னிப்பாக அவள் வேலைத்திறத்தைக் கவனித்துக்கொண்டிருந்
தான். இயற்கைக் காட்சியைக் காலத்திற்குத் தக்கபடி
வரைவதற்கு மிக்க தேர்ச்சிவேண்டும். சந்திராபாய் அவ்
விஷயத்தில் மிக்கப் பயிற்சியுடையவளானதால் வரதாஸிங்
அவள் கரம் சுறுசுறுப்பாய்ச் சாமார்த்தியத்தோடு சித்திரம்
எழுதுவதை வியப்போடும் சந்தோஷத்தோடும் கவனித்துக்
கொண்டிருந்தான்.

186533

* * * * *

வரதாஸிங்கும் சந்திராபாயும் அங்கிருக்கையில் துஷ்டர்
களாகிய விபாங்கனும் அவனுட்களும் என்ன செய்கிறார்க
ளென்று பார்ப்போம்.

ஆகாய விமானம் ஓட்டும் ஜகநாதன், தன் விமானம்
வைக்கப்பட்டிருக்கும் சிறு குடிசையிலிருக்கிறான். விபாங்
கன் சங்கு இருவரும் அவன்கூட இருக்கிறார்கள். அக் குடி
சையின் எதிரில் உள்ள வேறொரு சிறு வீட்டில் அவர்கள்
மூவரும் நின்று பேசிக்கொண் டிருக்கிறார்கள்.

ஜெகநாதன் கோட்டையிலிருந்து களவாடி வரப்பட்ட
அம்புகளில் ஒன்றை யெடுத்துக் கீழ் நோக்கி எறிந்து விபாங்
கனை நோக்கிப் "பார்த்தாயா? இந்த அம்பு எவ்வளவு விசை
யாய்ச் சென்று பாய்கின்றது. இதற்குத் தக்க இடத்தில்
சரியான பாரம் அமைக்கப்பட் டிருக்கிறது. ஆகையால் நீ
இந்த அம்பைக் கண்ணை மூடிக்கொண்டுக் கீழே எறிந்து
விடினும் அதன் கூர்மையான முன்பாகமே எப்போதும்
கீழ் நோக்கிச் செல்லும். இதிலுள்ள விசேஷம் இதுமட்டு
மல்ல. இதற்குத் தக்க பாரம் அளிக்கப்பட் டிருக்கிறது.
ஆகவே பூமியின் ஆக்ருஷண சக்தியால் இது எவ்வளவு உய

ரத்திலிருந்து எறியப்படுகிறதோ அவ்வளவு வேகமாய்த் தாக்கும். இது இவ்வளவு சமீபத்திலேயே எவ்வளவு பலத்தோடு தாக்கியதென்பதைப் பார்த்தாயல்லவா. உயரத்திலிருந்து இவற்றில் பலவற்றைப் பேசாமல் ஒரு கூடையிலிருந்து கொட்டி விட்டால் அம்புகளின் பின்னுலிருக்கும் இறகினுல் அவைப் பரவிப்போய்த் தாக்கும். குறி சற்றும் தப்பாது..." என்று அந்த அம்புகளின் பெருமையைப் பற்றிப் பிரசங்கம் செய்துகொண் டிருந்தான். விபாங்கனும் சங்கும் அதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சி யடைந்தார்கள்.

அச்சமயம் ஒருவன் துரிதமாய் இவர்களை நோக்கி வந்தான். அவன் முகக்குறியைக் கண்டதும் இவர்கள் ஏதோ விசேஷ சமாசாரம் இவன் கொண்டு வருகிருனென்று கருதி ஆவலோடு அவனை நோக்கினுர்கள். அவன் சந்திராபாய், பூங்காவனம், வரதாஸிங் இவர்கள் வண்டியேறிச் செல்கையில் வேவு பார்த்திருந்து விட்டுச் சென்ற விபாங்கன் ஆளாகிய சாமு என்பவனே.

அவன் இவர்களருகில் வந்ததும் விபாங்கன்முன் நின்று மிகப் பணிவாக வந்தன மளித்தான். விபாங்கன் ஒரு பெரிய அதிகாரிபோல் "என்ன சங்கதி கொண்டுவந்தாய்?" என்றுன். சாமு "எஜமானே! சந்திராபாயும், அவள் சுற்றத்தாளாகிய இன்னெரு கன்னிகையும், இந்தச் சங்காதாஸிடம் அடிமைபோ விருக்கிருனே—அவன் பெயர் நினைவில்லை. இவர்கள் மூவரும் எரிக்காட்டை நோக்கிச் சென்றுர்கள். நாற்பத்திரண்டாவது வீதியின் கோடியிற்சென்று அங்கிருந்து சமீபமான பாதையே சென்றுர்கள்" என்று மொழிந்தான்.

அதைக் கேட்டதும் விபாங்கன், சங்கு, ஜகநாதன் மூவரும் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்தார்கள். எனெ

னில், இப்போது சந்திராபாயும் வரதாஸிங்கும் சங்காதாஸை விட்டுப் பிரிந்துபோய் நாட்டிலிருக்கிருர்கள். ஆகையால் சுலபமாகவே அவர்கள் இருவரையும் ஒழித்துவிடலாம் என்பதே அத்துஷ்டர்களின் ஆலோசனே. சந்திராபாய், அவள் சுற்றத்தார், அவள் நண்பர்களாகிய சங்காதாஸ், வரதாஸிங் முதலிய அனைவரையும் கொன்று தான் சுப்பையா பிள்ளையின் புதையலேப் பெருததற்காக வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்பதே விபாங்கன் சங்கு இவர்களுடைய எண்ணமும் ஆவலும்.

அவர்கள் இருவரும் மிக்க புத்தி சாமார்த்தியமும், எத்தகைய பாதகங்களுக்கும் அஞ்சாத துணிகாமும், கல் மனமும், தந்திர யுக்திகளும் உடையவர்களே—ஆயினும் "நமது அக்கிரம காரியங்கள் நடக்கவொட்டாது தடுக்கும் சர்வ வல்லமையுடைய ஒருவன் இருக்கிருனே, அவன் கள்ளன்போல் அவாவர் உள்ளத்திலும் கடந்து நின்று அவாவர் செய்கைகளேயும் திட்டமாக அறிந்து கொள்ளும் சர்வ சக்தியுடையவனுயிற்றே, பிறகும் அவனுடைய தண்டனேக்குத் தப்பவல்லவர் ஒருவருமில்லேயே." என்ற சிந்தனே அவர்களுக்குச் சற்றுமில்லே.

20-வது அத்தியாயம்

தீனுக்காரர்களான விபாங்கன் சங்கு முதலியவர்கள் வஞ்சகமாக இவ்வாறு சூழ்ச்சிகளே யெல்லாம் செய்து கொண்டிருந்தாலும் சங்காதாஸ் சும்மாவிருக்கவில்லே. அவனிடம் இாகசியத் துப்பறியும் ஆசாமிகளும் வேறு இாகசிய வேவு ஆட்களும் இருக்கிருர்கள். அப்போதைக் கப்போது தன் வேலேகளுக்குச் சௌகரியப்படி அவர்களே யுபயோகப் படுத்திக்கொள்வது வழக்கம். இச் சந்தர்ப்பத்தில் அவன்

தன் இரகசியத் துப்பறியும் ஆட்களை ஆகாயவிமானம் இருக்குமிடங்களுக்கெல்லாம் அனுப்பி யிருந்தான்.

விபாங்கன், சங்கு, ஜெகநாதன் மூவரும் ஆகாய விமானமிருக்கும் இடத்திற்குச் சென்றபோது அந்த விடத்திற்குச் சமீபத்தில் கிருஷ்ணாராவின் இரகசியத் துப்பறியும் ஆட்களில் ஒருவன் மறைந்திருந்தான். ஜகநாதன், தன் ஆகாய விமானத்தை யதன் இருப்பிடத்தி லிருந்து வெளியில் கொண்டுவந்து அதிலிருந்து அம்பு எப்படி எறிவதென்பதைப்பற்றி விபாங்கனுக்கும் சங்குக்கும் காட்டிக்கொண்டிருந்தான். கடைசியில், அம்புக்கட்டை யிடுப்பில் கட்டிக்கொண்டு "இனிச் சுலபமாக எரிக் காட்டுக்குப் பறப்பேன். சந்திராபாயும், அந்தப் பயல் வரதாலிங்கும் சீக்கிரத்தில் ஒழிந்துவிடுவார்கள் என்பதிற் சந்தேகமே யில்லை" என்றான்.

விபாங்கன் ஆகாய விமானம் பறப்பதில் அது ஒரே நிலையில் அசையாமல் நிற்பதற்காகக் கண்டு பிடிக்கப்பட்ட கருவியைப்பற்றி மிக்க வியப்பும் சந்தோஷமும் நம்பிக்கையும் அடைந்திருந்தான். அதனால் அவன் ஜகநாதனை நோக்கி "நானும் கூட வருகிறேன்" என்றான்.

ஜெகநாதன் அதைக் கேட்டதும் தடுமாற்ற முற்றான். ஆயினும் விபாங்கன் பிரியத்திற்கு மறுத்துக்கூற அவனுக்குத் தைரியமில்லை. ஆகையால் கடைசியில் "சரி வா. இருவராகச் செல்வதில் நமது காரியம் இன்னும் அனுகூலமாகவே முடியும்" என்றான். அதன் பிறகு ஜகநாதன் விமானத்தில் ஏறியதும் விபாங்கனும் பாய்ந்து பின்னால் ஏறினான். அந்த ஆகாய விமானம் சற்றுதூரம் தரையிற் சென்றதும் பிறகு ஒரு பெரிய பட்சியைப்போல் ரிவ்வென்று ஆகாயத்தில் ஏறிப் பறந்து சென்றது.

சங்கரதாஸின் ஆளாகிய இரகசியத் துப்பறிபவன் ஜகநாதனும் சீனுக்காரரும் பேசிய வார்த்தைகளில் ஒன்று விடாமல் கேட்டிருந்தான். விமானம் சென்றதும், அவன் துரிதமாகச் சங்கரதாஸிருக்கு மிடத்தை நோக்கிச் சென்ருன்.

இதற்கிடையில் ஜெகநாதனும் விபாங்கனும் வானத்தில் உயரப்பறந்து சென்ருர்கள். அவர்கள் அப்படிப்பறப்பதென்னமோ அதிசயமல்ல; ஆனல் அந்தவிடத்தில் இவர்கள் சந்திராபாய் வரதாஸிங் இவர்களைப்போன்ற இரண்டு ஆசாமிகளைக் கண்டுபிடிப்பது மிகக் கஷ்டமே. அங்குள்ள ஜனங்க ளென்னமோ ஒரு நாள் ஒரு ஆகாயவிமானம் நமது கிராமத்தின்மேல் பன் முறை வட்ட மிட்டுக்கொண் டிருந்தது என்பதை நெடுநாள் மறக்கமாட்டார்கள்.

ஆயினும் ஜெகநாதன் தன் விமானத்தை விட்டுக்கொண்டு எங்கு தேடியும் சந்திராபாயையாவது வரதாஸிங்கையாவது காணக் கூடவில்லை. ஜெகநாதன் கடைசியில் சந்திராபாய் சென்றிருக்கும் வீட்டைக் கண்டுபிடித்தான். ஆனல் அங்கும் சந்திராபாய் காணப்படவில்லை. தாங்கள் கொண்டுவந்திருக்கும் அருமையான அம்புகளை வீணக அன்னியர்மேல் பிரயோகிப்பதில் பயனில்லை. ஆகையால் அவனும் விபாங்கனும் சற்று நேரம் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தார்கள். மிக்க தந்திர சாமர்த்தியமுடைய விபாங்கன் கூடவே ஒரு தூரதிருஷ்டிக் கண்ணுடியைக் கொண்டுபோ யிருந்தான்.

விபாங்கன் உடனே அதை யெடுத்து அதன் மூலமாய் நாற்புறங்களிலும் பார்க்கத் தொடங்கினன். சற்று நேரம் பார்த்தபின் "ஓகோ! அதோ அந்தக் குன்றின் ஓரத்தில் அவர்கள் இருக்கிருர்கள்" என்று சந்தோஷத்தோடு கூறினன்.

உண்மையாகவே சற்று தூரத்திலிருந்த ஒரு குன்றின் அடிவாரத்தில் ஒரு குடை நிழலில் சந்திராபாயும் அவளருகில் வரதாஸிங்கும் இருக்கிறார்கள். விபாங்கன் ஜெகநாதனை நோக்கி "சீக்கிரம்! துரிதமாய் அந்த விடத்திற்கு விமானத்தைக் கொண்டுபோ!" என்று இந்த விடத்தைச் சுட்டிக் காட்டினான்.

* * * * * *

சந்திராபாயும் வரதாஸிங்கும் நகரத்தைவிட்டு எரிக்காட்டுக்குப் புறப்படும் அதே சமயத்தில் சங்கரதாஸ் துரிதமாகப் புறப்பட்டுக் கோட்டையில் நடந்த களவைப்பற்றி யாராய்ச்சி செய்வதற்காக அங்குச் சென்றான். அவன் செல்லும் போது லெப்டினெண்ட் வேலப்பனும் வேறு சில இராணுவ உத்தியோகஸ்தரும் இவன் வருகைக்காக அங்கு ஆயத்தமாய் எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள். சங்கரதாஸ் அங்குச் சென்றதும் யாவரும் மிக்க ஆவலோடும் சந்தோஷத்தோடும் அவனை வரவேற்றுக் கொண்டாடினார்கள்.

உடனே சங்கரதாஸும் வேலப்பனும் மற்ற உத்தியோகஸ்தர்களும் சில போர்வீரர்களோடு களவு நடந்த இடத்திற்குச் சென்றார்கள். இவர்கள் அங்கிருந்த சாமான் வண்டிகளைச் சோதித்துக்கொண் டிருக்கையில் வயது முதிர்ந்த ஒரு ஆள், சைனியத்தைச் சேர்ந்தவன் பெருமூச்சு விட்டுக் கொண்டே யோடி வந்து "இங்கு சங்கரதாஸ் பண்டிதர் என்பவர் இருக்கிறாரா?" என்றான்.

சங்கரதாஸ் "ஆம், நான்றான். என்ன சங்கதி? துரிதமாகக் கூறு." என்றான்—அம் மனிதன் "அய்யா! காவல் கிடங்கில் இருக்கும் டெலிபோனில் உம்மை யாரோ கூப்பிடுகிறார்கள். மிக்க அவசியமான பிரமாத விஷயம் என்று கூறுகிறார்கள். உடனே வாருங்கள்" என்றான்.

சங்கரதாஸ் துரிதமாகச் சென்று டெலிபோனில் பேசினன். அவன் ஆகாய விமானக் கொட்டகைகளில் வைத்திருந்த ஆட்களில் ஒருவன் "நான் ஆளைக் கண்டு பிடித்துவிட்டேன். அவன் ஜெகநாதன் என்ற ஆகாய விமானி—அவன் ஒரு கள்ளன்—அவர்கள் எப்படியோ சந்திராபாயும் வாதாஸிங்கும் ஏரிக்காட்டிற்குச் சென்றிருக்கிருர்களென்பதை யறிந்துகொண் டிருக்கிருர்கள். ஜெகநாதன் ஒரு கத்தையம்புகளோடு விபாங்கனையும் ஆகாய விமானத்தில் ஏற்றிக்கொண்டு ஏரிக்காட்டிற்குச் சென்றிருக்கிருன்" என்ருன்.

இதைக் கேட்டதே சங்கரதாஸின் முகம் கோபத்தால் கறுகறுத்துவிட்டது. அவன் அட சனியன்களே! என்றதும், "நீ யுடனே போலீஸ் படையோடு அந்த ஆகாய விமானக் கொட்டகையி னருகில் மறைந்திருந்து ஜெகநாதனையும் அவனேடுகூட அங்கு வந்து இறங்குகிறவர்களையும் தப்பாமல் கைது செய்துகொண்டு வந்து விடு. ஏரிக்காட்டு விஷயத்தை நானே பார்த்துக்கொள்கிறேன்" என்ருன்.

உடனே யவன் அங்கிருந்து புறப்படப்போனுன். அதற்குள் அவன் மனதில் ஒரு ஆலோசனை யுதித்தது. உடனே யவன், ஏரிக்காட்டில் வெள்ளைச்சாமிப் பிள்ளையின் வீட்டிலுள்ள டெலிபோன் எண்ணைக்குறித்துக் கூப்பிட்டான். அங்கெல்லாம் மிக்க தூர இடங்களுக்கும் டெலிபோன் உண்டு. இவன் கூப்பிட்டதே யார் என்று பதில் வந்தது.

சங்கரதாஸ் "நான் சங்கரதாஸ் வெள்ளைச்சாமிப் பிள்ளை வீட்டிலிருக்கிருரா?" என்ருன்.

"நான்ருன் வெள்ளைச்சாமி" என்று பதில் வந்தது. "சந்திராபாயும் வாதாஸிங்கும் வீட்டிலிருக்கிருர்களா?" என்று சங்கரதாஸ் கேட்டான்.

வெள்ளைச்சாமிப்பிள்ளை "இல்லை. அவர்கள் சித்திரம் எழுத வெளியில் சென்றிருக்கிறார்கள்" என்றான்.

சங்கரதாஸ் "நீர் உடனே அவர்களிருக்கு மிடத்திற்குச் சென்று சந்திராபாயை யொரு கட்டிடத்திற்குள்ளாகவே வைத்துக்கொண் டிருக்கவேண்டும் என்றும், நான் வருமட்டும் அப்படிக் கட்டாயம் செய்யவேண்டுமென்றும் கூறும். தயவு செய்து உடனே வரதாஸிங்கைக் கண்டு பிடித்து இதைக்கூறும்" என்று கூறிவிட்டு,

லெப்டினென்ட் வேலப்பனை நோக்கி "நண்பனே! இங்கு வேகமாகச் செல்லும் மோட்டார் வண்டியிருக்கிறதா?" என்று வினவினான்.

லெப்டினென்ட் வேலப்பன் "ஆகா! இதோ ஒரு வினாடியில் தருகிறேன்" என்று சங்கரதாஸை யழைத்துக் கொண்டு இராணுவ மோட்டார் வண்டிக ளிருக்குமிடத்திற்கு நேராக அழைத்துச் சென்றான். அக்காலத்தில் சிலர் ஆகாய விமானங்களில் சென்று துரைத்தனத்திற்கு விரோதமாக வேவு வேலை செய்துகொண் டிருந்தார்கள். அதனால் அத்தகைய ஆகாய விமானங்களை யழிப்பதற்காக அதற்குத் தக்க பீரங்கிகள் ஏற்றப்பட்ட மோட்டார் வண்டிகள் அங்கு ஆயத்தமாக இருப்பது வழக்கம்.

சங்கரதாஸ் லெப்டினென்ட் வேலப்பனைக் கேட்ட சமயம் அத்தகைய பீரங்கியையுடைய ஒரு வண்டி அங்கிருந்தது. இருவரும் உடனே அவ்வண்டியி லேறிக்கொண்டு ஏரிக்காட்டை நோக்கிப் புறப்பட்டார்கள்.

* * * * *

வயோதிகனாகிய வெள்ளைச்சாமிப்பிள்ளை டெலிபோன் மூலமாக வந்த சங்கதியைக் கேட்டதும், தன் புத்திரியாகிய பூங்காவனத்தைக் கூப்பிட்டுச் சங்கதியைக்கூறி, "சங்கரதாஸ்

கூறுவதன் அர்த்தம் இன்னதென்று எனக்குப் புலப்பட வில்லை. சந்திராபாயும் வரதாஸிங்கும் எங்குச் சென்றிருக்கி ருர்கள் என்பது உனக்குத் தெரியுமோ?'' என்ருன். வயோ திகனுக்கு விஷயம் விளங்கவில்லை.

பூங்காவனம் "அவர்கள் இப்போது எங்கிருக்கிருர்க ளென்பது எனக்குத் தெரியாது. அதோ அவ்வழியாகச் சென்ருர்கள். ஆயினும் தந்தையே! அவர்களை யுடனே கண்டு பிடிக்கவேண்டும். அது ஏதோ மிக முக்கியமான விஷயமாக விருந்தாலன்றிச் சங்கரதாஸ் இச் சமாசாரத்தை யனுப்பியிரார். இதுமட்டும் உண்மை'' என்ருள்.

தன் புத்திரியின் மொழிகளைக் கேட்டதே வெள்ளைச் சாமிப் பிள்ளைக்கு பீதியும் உற்சாகமும் பிறந்துவிட்டன. அவன் தட்சணம் வீட்டிலிருந்து துரிதமாகப் புறப்பட்டு சந் திராபாயும் வரதாஸிங்கு மிருக்கு மிடத்தைத் தேடிக் கொண்டு சென்ருன்.

சந்திராபாய் ஒரு குன்றின் அடிவாரத்தில் உட்கார்ந்து அங்குப் புலப்பட்ட இயற்கைக் காட்சியைப் படத்திலெழு திக்கொண் டிருக்கிருள். அச் சமயம் வெள்ளைச்சாமிப் பிள்ளை மேல் வேட்டிகூட இல்லாமல் மிகத்துரிதமாய்த் தங் களை நோக்கி ஓடிவருவதைக் கண்டார்கள்.

வெள்ளைச்சாமிப் பிள்ளை தன் கரங்களால் வந்து விடுங் கள்! வந்து விடுங்கள் என்று சமிக்கை செய்துகொண்டே ஓடி வந்து அருகிற் சேர்ந்ததும் "சங்கரதாஸ் இப்போது தான் டெலிபோன் கொடுத்திருக்கிருன். சந்திராபாயைத் தான் வருமட்டும் ஒரு கட்டிடத்திற்குள்ளாகவே வைத்தி ருக்கும்படி மிக்க கண்டிப்பாய்க் கூறுகிருன்'' என்ருன்.

அதைக் கேட்டதே வரதாஸிங் மிக்க வியப்போடு அவ் வயோதிகனை நோக்கினுன். இவன் என்ன கூறுகிருனென்று

சிந்தித்தான். அதே விநாடி ஒருவித அபூர்வமான சத்தம் அவன் செவிகளிற் கேட்டது. அது ஆகாயத்திலிருந்து வருவதுபோற் றோன்றியது. உடனே மேல் நோக்கிப் பார்த்தான். கண்களுக்கு ஒன்றும் புலப்படவில்லை.

ஆயினும் ஒரு முறை கேட்ட அனுபவசாலிகள் அதென்ன சத்தமென்று தட்சண மறிந்துகொள்ளலாகும். வரதாஸிங் "ஓ! எங்கோ ஒரு ஆகாயவிமானம் பறக்கிறது. ஓ சந்திராபாய்! வா சீக்கிரம்" என்று அவள் கரத்தைப் பற்றி இழுத்துக்கொண்டு எதிரிலிருந்த புலங்களைக் கடந்து சென்றான். வெள்ளைச்சாமிப் பிள்ளையும் கூடவே ஓடினான்.

அச்சமயம் நற்காலமாய்ச் சமீபத்தில் ஒரு சிறு பால மிருந்தது. வரதாஸிங் இவர்களைப் பாலத்தின் கீழ்க் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு வானத்தை நோக்கினான். ஒரு ஆகாய விமானத்தில் இருவர் பறப்பதைக் கண்டான். அவர்கள் உருவங்கள் நன்றாகப் புலப்படவில்லை. ஆயினும் அவர்களே நம் எதிரிகள் என்று அவன் புத்தியிற் புலப்பட்டது.

சந்திராபாய் முதலியவர்கள் குன்றி னோரத்திலிருந்துச் செல்வதைக் கண்டதே விபாங்கன் ஜெகநாதனை நோக்கி "சீக்கிரம்! சீக்கிரம்! கீழ்நோக்கி விமானத்தைக் கீழ்நோக்கி இறக்கிச் செலுத்து. நான் சரியாகக் குறிபார்த்து அம்புகளைப் போட்டுவிடுகிறேன்" என்றான்.

ஆகாய விமானம் இவர்களை நோக்கித் தாழ்ந்துவரத் தொடங்கியது. ஆனால் நற்காலமாக இவர்களுக்கு முன்னடி எச்சரிக்கை கிடைத்தது. வரதாஸிங் சந்திராபாயையும், வயோதிகனாகிய வெள்ளைச்சாமிப் பிள்ளையையும் அழைத்துப் போய் அப்பாலத்தின் கீழ் மறைத்துவிட்டான். விபாங்கன் ஆகாயத்தில் மேலே யிருந்து இவர்கள் எங்கு மறைந்துவிட்

டார்களென் றறியமுடியாமல் கோபாவேசத்தோடு கீழே பார்த்துக்கொண் டிருக்கிறான்.

அவன் ஜெகநாதனை நோக்கிக் கோபத்தோடும் வெறுப்போடும் "அதோ அந்தத் தோட்டத்தைச் சுற்றிக்கொண்டு வா. அவர்கள் நம்மைக் காணுதிருந்தால் சீக்கிரம் எங்கிருந்தாலும் வெளியில் வந்தே தீருவார்கள். நாம் தங்களுக்காக வந்தோமென்று அவர்களறிய ஒரு காரணமுமில்லை" என்றான்.

சற்று நேரத்திற்குள் ஆகாய விமானத்தின் சத்தம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டே வந்தது. வரதாஸிங் சந்திராபாய் பிடித்திருந்த குடையை யெடுத்துப் போய் ஒரு கொம்பின்மேல் வைத்து ஒரு மரத்தடியில் நிறுத்திவிட்டான். விபாங்கன் தன் தூரதிருஷ்டிக் கண்ணுடியால் விமானத்திலிருந்து கீழே உற்று நோக்கினுன். தோட்டத்தில் குடையைக் கண்டான். "ஓகோ இவர்கள் வெளியில் வந்து விட்டார்கள் சந்திராபாய் குடையின்கீ ழிருக்கிறுள். வரதாஸிங்கும் கூடவே யிருக்கிறுன்" என்று எண்ணிக்கொண்டான். உடனே ஜெகநாதனை நோக்கி, "சீக்கிரம் திரும்பு. அதோ அங்கு" என்று கைத்தாற் சுட்டிக் காட்டினுன். ஜெகநாதன் விமானத்தைச் செலுத்திக்கொண்டு போய் விபாங்கன் குறித்த இடத்தில் நிறுத்தினுன். இதற்கிடையில் வரதாஸிங் ஒரு பெரிய விருக்ஷத்தினருகில் மறைந்து நின்று பார்த்துக்கொண்டிருக்கிறுன்.

விமானம் குடையிருக்கு மிடத்திற்கு நேராய் நின்றதும் விபாங்கன் அம்பு மூட்டையை யவிழ்த்து அம்புகளை யெல்லாம் கீழே குறிப்பாய் விட்டுவிட்டான். அவைகள் வேகத்தோடு வந்ததும் அந்தப் பெரிய குடையைப் பத்துப் பனிரண்டிடங்களில் துளைத்துவிட்டன. அம்புகள் குடையின்

மேல் தாக்கியதும் விபாங்கன் மிக்க சந்தோஷமும் திருப்தியு மான கூச்சலிட்டான். ஆனல் மறுநிமிடம் அச் சந்தோஷம் கோபமாக மாறியது. ஏனெனில், அவன் தூரதிருஷ்டிக் கண்ணுடி மூலமாய் நோக்கியபோது குடை நசுங்கிப்போய் தரையோடு தரையாய்ப் படிந்துவிட்டது. ஆனல் அங்கு ஒரு கழிமட்டு மிருக்கிறதேயன்றி ஆள் ஒருவருமில்லே.

அந்தோ! அவன் மனம் எரிந்துவிட்டது. இப்போது சந்திராபாயைப் பார்த்தாலும் பயனில்லே. ஏனெனில் வேறு அம்பில்லே. கோபத்தை யார்மேல் காட்டுவான்?

21-வது அத்தியாயம்

ஆகாய விமானங்களேச் சுடும் பீரங்கியோடு மோட்டார் வண்டியில் புறப்பட்ட சங்கரதாஸும் லெப்டினென்ட் வேலப்பனும் வண்டியை அதி வேகமாக விட்டுக் கொண்டு வருகிருர்கள்.

அவர்கள் எரிக்காட்டை நெருங்கியதே, சத்தங்களே மிக்க நுட்பமாக உணரும் அபூர்வசக்திவாய்ந்த சங்கரதாஸ் தங்கள் வண்டி செல்வதாலுண்டாகும் சத்தத்திலும் ஆகாய விமானத்தின் சத்தத்தை யெப்படியோ கிரகித்துக்கொண்டு "ஹா! நில் நில். இங்கு எங்கேயோ ஒரு ஆகாய விமானம் இருக்கிறது. சத்தத்தைக் கேள்" என்ருன்.

லெப்டினென்ட் வேலப்பன் உடனே வண்டியை நிறுத்திப் பீரங்கியை யாயத்தப் படுத்தினன். தங்கள் எண்ணம் பலிக்காமல் போய்விட்டதைக் கண்ட விபாங்கனும் ஜெகநாதனும் இனி என்ன செய்வதென்று இரண்டொரு நிமிடங்கள் விழித்தார்கள். வேலப்பன் பீரங்கியை ஆயத்தப்படுத்திய சமயம் இவர்கள் ஆகாயவிமானம் அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டது.

சங்கரதாஸ் விமானத்தைப் பார்த்துவிட்டான்; உடனே வேலப்பனுக்கு அதைக் காட்டிச் சுடுயென்ருன். வேலப்பன் குறிபார்ப்பதில் கெட்டிக்காரன். உடனே வெடிமேல் வெடிகள் கிளம்பின. அப்போதுதான் ஆகாய விமானத்திலிருக்கும் துஷ்டர்களுக்குத் தங்கள் ஆபத்து தெரிந்தது.

ஜெகநாதன் "அட பேய்களே! இவர்கள் ஆகாய விமானத்தைத் தாக்கும் பீரங்கி கொண்டுவந்திருக்கிருர்கள். ஐயோ! அடிபட்டுவிட்டது" என்று கூவினுன். உண்மையில் இவர்கள் விமானத்தைச் சரியாக நடத்தப் புதிதாக அமைத்திருந்த எந்திரத்தில் ஒரு குண்டு பாய்ந்து அதையியக்கும் சக்கரத்தை யழித்துவிட்டது. இப்போது இவர்களுக்கு மிக்க உதவியாயிருந்த அதே கருவி மிக்க ஆபத்தையுண்டாக்கக் கூடியதாய்விட்டது. விமானம் நிலையில் நிற்பது கஷ்டமாய் விட்டது. ஜெகநாதன் என்னசெய்தும் அது அலங்கோலமாய் அசைந்தாடத் தொடங்கியது.

லெப்டினென்ட் வேலப்பனே குண்டுமாரி பொழிந்தபடியே யிருக்கிருன். ஆனுல் அந்த ஒரு குண்டே போதும். அது விமானத்தின் உயிர் நிலையையே தாக்கிவிட்டது. கடைசியில் விமானம் கீழ் நோக்கிச் செல்லத் தொடங்கியது.

திடீலென்று நேர்ந்த அக்காட்சியைக் கண்ட சந்திராபாய், வரதாஸிங், வெள்ளைச்சாமிப் பிள்ளை மூவரும் மிக்க வியப்படைந்தார்கள். சங்கரதாஸ் அவ்வளவு சமீபத்திலிருப்பது இவர்களுக்குத் தெரியாது. வரதாஸிங் "அதில் என்னவோ கெடுதி நேர்ந்தது. வாருங்கள் வாருங்கள் என்று விமானம் விழும் இடத்தை நோக்கி யோடினுன்.

சங்கரதாஸும் வேலப்பனும் முன்னமே வண்டியைவிட்டிறங்கி ஓடி வருகிருர்கள். விமானம் சுமார் அரை மைல் தூரத்தில் ஒரு கால்வாயின் ஓரத்தில் விழுந்து சின்னபின்ன

மாய்ப் போய்விட்டது. ஜெகநாதன் அதற்குள் அகப்பட்டுக் கொண்டு தேகம் முறிந்து அசைவற்றுக் கிடக்கிறான். விபாங்கன் அவன்மேல் விழுந்தான். அவனுக்குப் பல இடங்களில் அடிபட்டாலும் அவன் கஷ்டத்தோடேனும் சமாளித் தெழுந்து, இரு பக்கங்களிலு மிருந்து ஓடி வருகிறவர்கள் அருகில் வருவதற்குள் சமீபத்திலிருந்த பாறைகள் புதர்களினிடையில் நுழைந்து மறைந்துவிட்டான்.

சங்கரதாஸ் விமானம் அழிந்து கிடப்பதை யுற்றுநோக்கிய பின் அதற்குள் சிக்கிக் கிடக்கும் ஜகநாதனை வெளியிலெடுப்பதைப் பார்த்து "பாபம் இறந்து போனான். மற்றக் கள்ளப்பயல் எங்கோ மறைந்து கொண்டான்" என்றான். அம்மொழிகள் சற்று தூரத்திலிருக்கும் விபாங்கன் செவிகளில் விழுந்ததும் அவன் வெறுப்போடு முண முணத்துக் கொண்டே மெதுவாய் அந்த விடத்திலிருந்து இன்னும் அடர்ந்த செடிகளில் நுழைந்து தூரப்போய்விட்டான்.

அப்போதுதான் சந்திராபாய் முதலியவர்கள் அங்கு வந்து சேர்ந்தார்கள். சங்கரதாஸையும் வேலப்பனையும் கண்டதே அவர்களுக்குண்டான வியப்பும் சந்தோஷமும் சொல்லமுடியாது. சங்கரதாஸ் வேலப்பன் இருவர்க்கும் சந்திராபாய் முதலியவர்கள் அங்கிருப்பது தெரியும்.

சங்கரதாஸ் சந்திராபாயை நோக்கி "நீ ஒரு ஆபத்துமின்றி க்ஷேமமாக விருப்பதைக்காண மிக்க சந்தோஷமடைகிறேன்" என்றான்.

சந்திராபாய் அங்கு கீழே இருந்த ஜெகநாதன் தேகத்தைக் கண்டு "அப்பா! என்ன கோரமான மரணம் பாபம்" என்றாள்.

சங்கரதாஸ் "நீ பரிதாபப்படுவதற்கு மகிழ்ச்சியேயடைகிறேன். விரோதியாயினும் பரிதாபம் — இரக்கம்

காட்டவேண்டியதே. ஆனால் இவனுக்கோ கடவுளே தக்க தண்டனை யளித்திருக்கிறார். விபாங்கனேனும் அக்கிரமமாக வேனும் நம்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ளக் காரணமுடையவன். ஏனெனில் அவன் அபகரிக்க விருந்த சுப்பையா பிள்ளையின் புதையலை நாம் கைப்பற்றிக்கொண்டோம். இந்த ஜெகநாதன் இதில் ஏன் பிரவேசிக்கவேண்டும். இவன் கூலிக்காக மனிதரைக் கொல்லவந்த சண்டாளன். இவன் இவ்வாறு அழியவேண்டியதே. ஆதலின் இவனுக்காக நீ விசனப்படலாகாது" என்றான்.

சங்காதாஸ் "இனி நடந்த சங்கதியென்ன கூறு" என்றான். சந்திராபாய் தாங்கள் அங்கு வந்தபின் நல்ல காட்சிகளைப் படமெழுத வெளியில் வந்ததையும் அச்சமயம் வெள்ளைச்சாமிப் பிள்ளை ஓடி வந்து சங்காதாஸ் அனுப்பிய சங்கதியைக் கூறியதையும் பிறகு நடந்த சங்கதிகளையும் யாவும் கூறினாள்.

அதன் பிறகு அவர்கள் இறந்துபோன ஜெகநாதனுடைய சவத்தை யடக்கம் செய்துவிட்டு வெள்ளைச்சாமிப் பிள்ளையின் வீட்டில் அன்று தங்கி யிருந்து பிறகு நகரத்திற்குத் திரும்பினார்கள்.

அந்தோ! துஷ்டர்களும் அக்கிரமஸ்தர்களும் தங்களுக்குப் பொருள் கிடைப்பதைக் கருதுகிறார்களே யன்றி, அப்பொருளை யெத்தகைய வழியில் சம்பாதிக்கிறோம் என்பதை யெள்ளளவும் கருதுகிறார்களில்லை.

"பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை" என்ற தமிழ் வேதத்தைச் சற்றும் கருதுகிறார்க ளில்லை.

அன்னியன் இன்னொருவர்மேல் அக்கிரமமாக வஞ்சந் தீர்த்துக்கொள்ள முயன்றான். எத்தகைய வஞ்சம்? நிரப

ராதிகளாகிய இருவரை யக்கிரமமாகவும் கொடூரமாகவும் வதைத்துக் கொல்வதாகிய காரியம். ஜெகநாதன் இத்தகைய காரியத்தைக் கூலிக்குச் செய்ய உடன்பட்டான். முன்னம் ஒரு வீட்டையழித்து அதிலுள்ளவர்களைக்கொல்ல முயன்றான். அக்காரியம் பலிக்க முடியாமல் அதைச்செய்யத் தூண்டிய விபாங்கனுக்கே கெடுதிசெய்து விட்டது. அதாவது அவனது நம்பிக்கையான ஆளாகிய சங்கிலியைக் கொன்று அவர்கள் இருந்த கட்டிடத்தையு மழித்து விட்டது. இரண்டாம் முறை ஜெகநாதனையே கொன்றது.

இவற்றாலாவது விபாங்கனுக்குப் புத்தி வருமோ? ஒரு போதும் வராது. மூடர்களுக்குத் தீங்கு வந்தபோதுங்கூட புத்தி வருவதில்லை. மலையிலுள்ள காடுகளனைத்தும் தீப்பற்றி யெரியும்போதுகூட பல மிருகங்களை விழுங்கிவிட்டுப் படுத்துறங்கும் மலைப்பாம்புகள் ஆபத்தைப்பற்றிச் சற்றேனும் கருதாமல் உறங்கிக்கொண்டுதா னிருக்கும்.

* * * *

விபாங்கன் நெடுநேரம் குன்றுகளிலும் புதர்களிலும் மறைந்துகொண் டிருந்து கடைசியில் மெதுவாய் நகர்ந்து சென்று கஷ்டத்தோடு போய் ஒரு வண்டி பேசிக்கொண்டு நகரம்போய்ச் சேர்ந்தான். வெளிக்குப் பார்த்தால் ஒரு புராதனமான பாழடைந்த வீடுபோல் இருக்கும் வீட்டிற்குள் நன்றாக அலங்கரிக்கப்பட்ட ஒரு விசாலமான அறையில் விபாங்கன் உட்கார்ந்துகொண் டிருக்கிறான். அவன் எதிரிலிருந்த மேஜைமேல் ஒரு கண்ணாடிக் தட்டும் ஒரு புட்டியுமிருந்தன. அப் புட்டியில் சில (Phosphoru-) தீமுரிப் பாஷாணம் சலத்தில் போடப்பட் டிருந்தன. அதோடு ஒரு விதக் கண்ணாடிக் குழாயு மிருந்தது. அச்சமையம் விபாங்கன் அவற்றை யெல்லாம் விட்டுவிட்டு அவசரத்தோடு ஒரு கடிதம் வரைந்துக்கொண் டிருக்கிறான். அதை யெழுதி

முடித்ததும் மேஜைமேலிருந்த மணியை யடித்தான். உடனே யொரு சின வேலையாள் அங்கு வந்தான்.

விபாங்கன் அக்கடிதத்தை யவனிடமளித்து "இதை யெடுத்துப்போய் நாகம்மாளிடம் கொடு. அவள் கையிலே யே கொடு. அவள் அங்கிருந்தால் அவளோடு கூடவே வா!" என்று கூறினன்.

அந்த ஆள் கடிதத்தை யெடுத்துச் சென்றதே விபாங் கன் தான் புதிதாய் ஆயத்தம் செய்யும் கருவியை வேலை செய்யத் தொடங்கினன். அவன் அந்த வேலையைச் செய்து முடித்ததே அவனுடைய பிரதான ஆளான சங்கு அங்கு வந்தான்.

அவன் விபாங்கன் முன் நின்று மிக்க மரியாதையோடு வந்தன மளித்து "எஜமானே! என்னை யென்ன வேலைக்காக இங்கு வரும்படிக் கட்டளையிட்டீர்கள்?" என்றான்.

விபாங்கன் "இங்கு வா! இதைப் பார்!" என்றான். சங்கு அருகில் வந்ததும் விபாங்கன் தான் ஆயத்தப்படுத் திய புதுக் கருவியை யவனுக்கு விவரித்துக் காட்டி "பார்த் தாயா! இதனல் நான் எந்த விடத்தில் எப்போது நினைத் தாலும் தீமூட்டி விடக்கூடும்" என்றான்.

விபாங்கன் தன் கூட்டாளியாகிய கள்ளனுக்குத் தான் கண்டு பிடித்த அதிசயமான கருவியைக் காட்டிக்கொண் டிருக்கும்போதே, அவன் கடிதம் கொடுத்தனுப்பிய ஆள் நாகம்மாள் என்பவளிடம் சென்றான். அவள் மிக்க நாணய மாயலங்கரிக்கப்பட்ட ஒரு அறையில் இருக்கிறாள்.

அவள் மிக்க வசிகரமானவள். அவள் இரண்டொரு அற்ப விஷயங்கள் தவிர மற்றவற்றி லெல்லாம் சந்திராபா யைப்போலவே யிருக்கிறாள். அவளுடைய கருப்பு வேலைக் காரி விபாங்கன் அனுப்பிய ஆளை யுள்ளே யழைத்துச் சென்

றதே அவள் தன் ஆசனத்திலிருந்து நிதானமாகத் திரும்பி அவன் கொண்டு வந்த கடிதத்தை மெதுவாக வாசித்துப் பார்த்தாள். அதைப் பார்த்ததும் ஒருவிதமான உற்சாகத் தோடு தன் நீக்ரோ வேலைக்காரியை நோக்கித் தன் மேல் போர்வை முதலியவற்றை யெடுத்துக்கொண்டு வரும்படி சமிக்கை செய்துவிட்டு, வந்த ஆளைநோக்கி "சற்றிரு. நான் உன்கூடவே வருகிறேன்" என்றாள்.

நாகம்மாள் என்பவள் நாகத்தின் விஷகுணத்தையே யுடையவளென்று அவள் பிரவேசிக்கும் காரியத்தாலேயே விளங்கும். அவள் விபாங்கனது அநீதமும் அக்கிரமுமாகிய காரியங்களில் உடந்தையாக விருக்கும் ஆட்களில் ஒருத்தி யாகும். சீவகாருண்யம், சத்தியம், நீதி முதலிய சற்குணங் கள் சற்றேனு மில்லாதவர்களே விபாங்கன், சங்கு, இத் தகைய ஆசாமிகளுக்கு உடந்தையா யிருக்க முடியும். மேல் நாடுகளில் ஆண் பெண் இருபாலாரிலும் இத்தகைய அயோக்கியர்கள் யேராளமாகக் காணலாம். அதிலும் பெண் பாலாரில் இத்தகையோரைக் காண்பதெனில் நம் நாட்டில் மிக்க அபூர்வமும் ஆச்சரியமுமாகவே கருதப்படும். மேல் நாட்டில் அத்தகைய மாதர் அதிகம்.

ஏனெனில் அவர்கள் பெண்களுக்குக் கொடுத்திருக்கும் மிதமிஞ்சிய சுயாதீனமே அதற்குக் காரணம். நாகம்மா ளுக்கு அக்கடிதம் வந்தது மிக்க சந்தோஷம். ஏனெனில் சும்மா வீட்டிலிருப்பதைவிடச் சுறுசுறுப்பாகவும் துணிகர மாகவும் வேலைசெய்யச் சமயம் கிடைத்தது அவளுக்கு மிக்க சந்தோஷம்.

சற்று நேரத்திற்குள் நாகம்மாள் விபாங்கனது இரகசிய அறைக்குள் பிரவேசித்தாள். விபாங்கன் அவளைக் கண்ட தும் "ஹா! இதோ இக்கன்னிகைதான்" என்று சங்குக்குக்

காட்டினுன். சங்கு நன்ருக அவளை யுற்றுநோக்கிக் கடைசியில் தலையசைத்தான். விபாங்கன் ஒரு அளக்கும் நாடாவால் அவள் உயரம் முதலியவற்றை மிக்க ஜாக்கிரதையா யளந்து கொண்டே அவளிடம் அவ்வூர் பாஷையிலும் சங்கிடம் சீனு பாஷையிலும் பேசிக்கொண் டிருந்தான். அவர்கள் தாங்கள் செய்யக்கருதிய சதிச்செயலைப்பற்றிய தகவல்களை மிக்க ஜாக்கிரதையாய் ஆலோசனை செய்தார்கள். யாவும் திட்டமாக ஏற்பாடு செய்துகொண்ட பின் சங்கு விபாங்கன் நாகம்மாள் மூவரும் வீட்டைவிட்டுப் புறப்பட்டார்கள்.

வீட்டெதிரில் ஒரு வண்டி நின்றுகொண் டிருக்கிறது. சற்றுதூரத்தில் இரண்டு போக்கிரிகள் நின்றுகொண் டிருக்கிருர்கள். சங்கு முதலியவர்கள் வெளியில் வந்ததும் சங்கு அப் போக்கிரிகளை விளித்து வண்டியிலேறுங்கள் என்ருன். உடனே ஐந்து கள்ளர்களும் வண்டியில் ஏறிக்கொண்டார்கள் வண்டி வேகமாகச் செல்லத் தொடங்கியது.

* * * *

வாதாஸிங் அடிக்கடி தீக்குச்சிப் பெட்டியை மறந்து வைத்துவிட்டுச் சுருட்டுப் பிடிக்கப்போகும்போது தடுமாற்றமடைவது வழக்கம். சங்கரதாஸ் அச்சமயங்களில் கேலியாய் நகைப்பான். ஆகையால் வாதாஸிங்குக்குத் திடீலென்று சந்தோஷத்தையும் வியப்பையும் உண்டாக்கக் கருதி சங்கரதாஸ் சாமர்த்தியமாக ஒருவிதமான கருவியைச் செய்தான். அதாவது அவனது சட்டைக் கையிலிருக்கும் பொத்தானிலிருந்து மெல்விய இரண்டு கம்பிகள் சட்டைக் கையி னுள் பக்கமே சென்று அக்குளின் ஓரமாகப் போய் உட்சட்டைச் சேபிக்குள் சேர்கின்றன. அச்சேபியில் ஒரு மின்சாரக் கருவியிருக்கிறது. இக்கம்பிகளின் முனைகள் அதில் பிணைக்கப்பட் டிருக்கின்றன. அவற்றின் மறு முனைகள் கைச்

சட்டையிலுள்ள பொத்தான் கீழ் சொருகப்பட்டு எள்ளளவு மேலுக்கு வந்திருக்கின்றன. அவன் புயத்தை யழுத்திய தட்சணம் அப்பொத்தான்மேல் கிளம்பியிருக்கும் கம்பி களின் நுனியில் தீச்சுடர் உண்டாகும்.

சங்கரதாஸ் அந்தக் கருவியை முடித்த மறுவிநாடி வரதாஸிங் அங்கு வந்து கதவைத் தட்டினான். சங்கரதாஸ் சட்டென்று தன் சட்டையை யணிந்துகொண்டு கதவைத் திறந்தான். வரதாஸிங் உள்ளே வந்ததும் "என்ன சமா சாரம்? புதுவிசேஷ மேதேனு முண்டோ?" என்று கேட் டான்.

சங்கரதாஸ் "ஒன்றுமில்லை. சுருட்டுப் பிடிப்பதுதானே" என்று கூறிக்கொண்டே தன் சுருட்டு டப்பியை யவனிட மளித்தான். வரதாஸிங் அந்த டப்பியிலிருந்து ஒரு சுருட் டையெடுத்து வாயில்வைத்துக்கொண்டு அதைப் பற்றவைக் கத் தீக்குச்சிப் பெட்டியை யெடுப்பதற்காகத் தன் ஜேபி யில் கையை வைத்தான். வழக்கம்போல் அதைமறந்து வீட்டிலேயே வைத்துவிட்டதா யறிந்து நாணத்தோடு சங்கர தாஸை நோக்கினான்.

சங்கரதாஸ் புன்னகைபுரிந்து நின்றான். அச்சமயம் மேஜைமேல் சங்கரதாஸ் சுருட்டு பற்றவைக்க உபயோகிக் கும் சுழல்வத்திக் குழல் இருந்தது. அதன் மரையைத் திருப்பினால் அதன் நுனியிலிருக்கும் வத்தி இரண்டு மூன்று விநாடிகள் எரியும். வரதாஸிங் ஆவலோடு அதை யெடுத்து இரண்டு மூன்று முறை திருப்பியும் அது பற்றவில்லை. வரதா ஸிங் அதில் வத்தி ஆய்விட்டதென்று எண்ணிக்கொண்டு அதை வெறுப்போடு கீழேவைத்துவிட்டு விழித்தான். இவ்வளவிற்கும் சங்கரதாஸ் அவனை நோக்கி வேடிக்கையாக நகைத்துக்கொண்டே யிருந்தான். கடைசியில் தன் சுருட்

டை வாயில்வைத்து அதைத் தன் சட்டைக் கையிலுள்ள பொத்தான்மேல் வைத்துப் பற்றவைத்துக் கொண்டான்.

அதைக் கண்ட வரதாஸிங் மிக்க வியப்படைந்து "இதென்ன புதுவித்தை" என்றான்.

சங்கரதாஸ் "இது உனக்கு வேடிக்கையாக விருக்கு மென்றே செய்தேன்" என்று மேல் சட்டையைக் கழற்றி விட்டு தன் புதுக்கருவியை வரதாஸிங்குக்குக்காட்டி அதைப் பற்றி விவரமாகக்கூறி "ஒருநாளைக்கு இதை யுனக்குத்தா னளிப்பேன்" என்றான். உண்மையில் வரதாஸிங் அந்த அதிசயமானகருவியைப்பற்றி மிக்கவியப்பும் சந்தோஷமுமே யடைந்தான்.

பிறகு இருவரும் சம்பாஷித்துக்கொண் டிருந்தபோது வரதாஸிங் "அந்த ஆகாயவிமானத்திலிருந்த ஆட்களைப்பற்றி ஏதேனும் சமாசாரம் வந்ததா?" என்று கேட்டான்.

சங்கரதாஸ் "ஜெககாதன்றான் மடிந்தான். அதைக் கண்ணாரக் கண்டோம். அக்கள்ளப்பயல் விபாங்கனுக்குப் பலமானகாயங்கள் படவில்லை யாதலின் அவன் தப்பித்துக் கொண்டு தன் இரகசிய விடம் வந்து சேர்ந்திருக்கிறான் என அறியலானேன்" என்றான்.

22-வது அத்தியாயம்

சந்திராபாய் தன் அறையில் உட்கார்ந்து தன் அத்தைக்கு ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் காட்டிக் கொண்டிருக்கிறாள். இரவு ஏழரை அல்லது எட்டு மணியிருக்கும். அச்சமயம் விபாங்கன் முதலியவர்கள் ஏறிய வண்டி சந்திராபாய் வீடிருக்கும் வீதியில் பிரவேசித்து அதன்கீழ்க் கோடியில் நின்றது.

விபாங்கனும் சங்கும் உடனே வண்டியிலிருந் திறங்கி நாகம்மாளையும் இறங்கச் சொன்னார்கள். அவள் இறங்கிய தும் விபாங்கன் அவளை நோக்கி 'நேரே வீதிவழியே செல். உனக்கு அந்த வீடுதான் நன்றாய்த் தெரியும்'' என்றான். அவள் ஆகா என்று நடந்தாள்.

பிறகு விபாங்கன் வண்டியிலிருக்கும் இரண்டு முரட்டுப் போக்கிரிகளையும் நோக்கி "நீங்கள் நேராய் அந்த வீட்டி னெதிரில் அவளைப் பிடிக்கவேண்டும். மிக்க ஜாக்கிரதை யோடு நடந்துகொண்டால்தான் சொன்னபடி பணம் கிடைக்கும். வேலை முடிந்ததும் வீதியின் திருப்பத்திற்கு வாருங்கள். நாங்க ளிருவரும் அங்கு நின்றிருப்போம். இனி செல்லுங்கள்'' என்று கூறி விட்டதும் விபாங்கனும் சங் கும் துரிதமாய் நடந்து வீதியின் கோடியிலுள்ள திருப்பத் தை நோக்கிச் சென்றார்கள்.

சந்திராபாய் வாசித்துக்கொண்டிருந்த புத்தகம் முடிந்து விட்டதால் அவள் அப்புத்தகத்தை மேஜைமேல் வைத்தாள். மறுவிநாடி சந்திராபாயும் அவள் அத்தையும் உட்கார்ந்திருக் கும் அதே புத்தகசாலைக்கு நேராய்க் கீழே வீதியிலிருந்து யாரோ "உதவி! உதவி!!'' என்று அலறிக்கூச்சலிடும் சத்தம் கேட்டது. அறைக்கு வெளியிலிருந்த ஜெகநாதன் உள்ளே ஓடிவந்து வீதியின் பக்கமாக விருக்கும் சாளரத்தின் கத வைத் திறந்துவிட்டான். உடனே சந்திராபாய் ஓடிப்போய் சாளரத்தில் எட்டிப்பார்த்து "அய்யோ அவர்கள் பாவம் அந்தப் பெண்ணைக் களவாடிக்கொண்டு போகிறார்கள்'' என்று கூவினாள்.

வீதியில் மாயக்கள்ளியாகிய நாகம்மாள் சந்திராபாயின் வீட்டெதிரில் வந்து நின்றதும் இரண்டு போக்கிரிகள் வண் டியை யங்குகொண்டுவந்து தட்டென்று நிறுத்திக் கீழே

குதித்துப் பாய்ந்துபோய் அவளைப் பிடித்துக்கொண்டதும் அவள் மிக்க நடுக்கங் கொண்டவள்போல் கூச்சலிட்டாள். அத்துஷ்டர்கள் மிக்க பலத்தோடு அவளைத் தூக்கிவந்து வண்டியில்போட முயல்கிறவர்கள்போல் நடிக்கிறார்கள். நாகம்மாள் அவர்கள் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ளத் தன்னாலானவரை திமிறிக்கொண்டு முயற்சி செய்கிறாள். யாவும் மெய்போலவே காண்கிறது.

இக்காட்சியைக் கண்டதும் ஜெகநாதன் நொடியில் கீழிறங்கிவந்து தெருக்கதவைத் திறந்தான். சந்திராபாயும் அவள் அத்தையும் அவன் பின்னால் ஓடிவந்தார்கள். நாகம்மாளுக்கு உதவியாக மனிதர்கள் வருவதைக் கண்டதே, அதற்காகப் பயந்து அவளை விட்டுவிட் டோடுகிறவர்கள் போல் இரண்டு கள்ளப்பயல்களும் வண்டியிலேறிக்கொண்டு வேகமாய்ச் சென்று வீதியின் கோடியில் திரும்பி விட் டார்கள்.

கள்ளியாகிய நாகம்மாள் கள்ளரிடம் போராடி மிக்க ஆயாசமும் பீதியு மடைந்தவள்போல் பெருமூச்சு விட்டபடி கீழே வீழ்ந்து விட்டாள். சந்திராபாய், அவள் அத்தை, ஜகநாதன் மூவரும் அவளைச் சூழ்ந்துகொண்டார்கள். அதற்குள் வீதியில் செல்பவர்களும் சிலர் வந்து சூழ்ந்துகொண் டார்கள். சந்திராபாய் ஜகநாதனைநோக்கி “இவளை வீட்டிற் குள் எடுத்துச்செல்” என்றாள்.

அவ்வாறே மூவரும் அவளைத் தூக்கிக்கொண்டுபோய்ப் புத்தகசாலை யறையில் ஒருநாற்காலியில் படுக்கவைத்தார்கள். நாகம்மாள் மெய்யாக மிக்க பீதியடைந்து இன்னும் அக் கள்ளரிடம் சிக்கிக்கொண் டிருப்பதாகவே மிரட்சியடைந்த வள்போல் அலறினள்.

சந்திராபாய்; அவள் அத்தை, ஜகநாதன் வேலைக்காரி யாகிய மாரி இவர்களனைவரும் அவளுக்குப் பலவித உபசா

ரங்களைச் செய்யத் தொடங்கினார்கள். ஒருவர் விசிறியால் விசிறவும் ஒருவர் குளிர்ந்த ஜலத்தால் அவள் முகத்தைத் துடைக்கவும் ஒருவர் மூர்ச்சையைத் தெளியவைக்கும் உப்பை யவள் நாசியிற்காட்டவுமாய்ச் சற்றுநேரம் உபசாரங்கள் நடந்தபின் அவள் புத்தி சரியான சுயாதீனத்திற்கு வந்தவள் போல் கண்களைத்திறந்து பார்த்துத் தன்னைக் காப்பாற்றியவர்களை நோக்கி "ஆ! புண்ணியவதிகாள்! கடவுள்தான் உங்களுக்குப் பதில் நன்மை செய்யவேண்டும்" என்று சமிக்கையாய் கூறினாள்.

ஜானகியம்மாள் "நடந்த சங்கதி யென்ன? நிதானமாய்க்கூறு" என்று வினவினாள்.

நாகம்மாள் கண்ணீர் விட்டுக்கொண்டே "அம்மா! நான் ஒரு ஏழைக்குடும்பத்தில் பிறந்தவள். மிக்க பெருந்தன்மைவாய்ந்த ஒரு சீமாட்டியிடம் வேலைசெய்துகொண்டிருந்தேன். அந்தம்மாள் புருடன் வர்த்தகர். திடீலென்று இரண்டு வர்த்தகக்கப்பல் முழுகிவிட்டதால் அவர் மிக்க நஷ்டமடைந்து கடன்காரரிடம் அவமானப்பட லாகாதென்று தற்கொலை புரிந்துகொண்டார்.

அந்தம்மாள் மகா உத்தமி யாதலின் தன்சொத்துக்கள் யாவற்றையும்விற்றுக் கடன்காரருக்குப் பங்கிட்டுக்கொடுத்துவிட்டாள். அதையறிந்த அவள் கணவனுடைய நண்பர்கள் ஒன்று சேர்ந்து கடன்காரரை யழைத்து அந்த உத்தமிக்குச் சீவனத்திற்கு வேண்டியமட்டும் கொடுத்துவிட வேண்டுமென்றும் தாங்களும் கொஞ்சம் அதோடு சேர்ப்பதாகவும் ஏற்பாடு செய்தார்கள். இப்போது வேலையாளை வைத்துக் கொள்ள அந்தம்மாளால் முடியவில்லை. ஆகையால் நான் வேறே வேலைக்காக அலைந்துகொண் டிருக்கிறேன். நான் இவ்வீதியின் கோடியில் வரும்போது நம் நாட்டிலுள்ள ஏழைப்பெண்கள் பிள்ளைகளைப் பிடித்துப்போய் மேற்குத்

தேசத்திலுள்ள தோட்டக்காரருக்கு விற்கும் ஆட்கள் என்னைத் துரத்தி வந்தார்கள். நான் ஓடிவந்து எந்தவீட்டிலாவது நுழைந்துகொள்ளலாமென்று முயலும்போது என்னைப் பிடித்துக் கொண்டார்கள்.

"ஓ! அம்மா! தயவுசெய்து நான் சற்று சமாளித்துக் கொள்ளுமட்டும் இங்கே யிருக்கும்படி அனுமதியளித்தால் பெரும் புண்ணியம். தங்களுக்கும் இதோ என் தாய்போலிருக்கும் இந்தம்மாளுக்கும் ஊழியம் செய்யும் பாக்கியமட்டும் எனக்குக் கிடைத்தால்" என்று தேம்பி யழுதாள்.

அந்தோ "பெண்ணென்றால் பேயு மிரங்கும்" என்பது பழமொழி யன்றோ. சந்திராபாய் அவள் அத்தை முதலியவர்கள் சூதுவாது கபடு ஒன்று மறியாதவர்கள். தங்கள் கண்முன் நடந்த விஷயத்தை அவர்கள் எப்படித்தான் பொய் நாடகமென்று கருதுவார்கள். யாவும் மெய்யென்றே நம்பி அவள்மேல் மிக்க இரக்கங்கொண்டார்கள். ஆதலின் அவள் கட்டுக்கதையான சரித்திரத்தைக் கேட்டதே மனமிரங்கிக் காருண்யம் மேலிட்டுவிட்டது.

சந்திராபாய் தன் கைக்குட்டையால் அக் கபடக் கள்ளியின் கண்ணீரைத்துடைத்து"நீ ஒன்றுக்கும் வருத்தப்பட வேண்டாம். கவலை கொள்ள வேண்டாம்" என்று குளிர்ந்த நகையோடு கூறி மாரியை நோக்கி "மாரி! இவளை மேல் மாடிக் கழைத்துச்செல். இந்தப் பெரிய வீட்டில் இவளுக்குச் செய்ய எவ்வளவோ வேலைகளகப்படும் என்பது உண்மை" என்றாள்.

நாகம்மாள் சந்திராபாய்க்கு நன்றியறிதலோடு வந்தனமளித்தாள். இங்கு அவள் அத்தகைய தந்திர சாமார்த்தியத்தோடு நாடகம் நடித்துக்கொண்டிருக்கையில் போக்கிரிகள் இருவரும் வீதியில் கோடியிலுள்ள திருப்பத்தில் விபாங்க

னும் சங்கும் நிற்குமிடத்தில் வண்டியை நிறுத்தினுர்கள். சீனுக்காரர் இருவரும் உடனே வண்டிக்குள் ஏறிக்கொண் டதும் விபாங்கன் "எப்படி முடிந்தது விவகாரம்?" என்றுன்.

போக்கிரிகள் "எஜமானே! ஒவ்வொரு அம்சத்திலும் தாங்கள் எவ்வாறு நடக்கவேண்டுமென்று எதிர்பார்த்தீர் களோ அவ்வாறே நடந்தேறியது. அவர்கள் அப்பெண்ணை வீட்டிற்குள் தூக்கிச் சென்றுர்கள். ஒரு ஆடவன், வயது முதிர்ந்த ஒரு மாது, வாலிபமாது ஒருத்தி மூவருமாக அவளை யுள்ளே யெடுத்துச் சென்றதை நாங்கள் கண்ணுரக் கண் டோம்" என்றுர்கள்.

யாவும் கேட்டதே விபாங்கனுக்கு மிக்க சந்தோஷமுண் டாயிற்று. அவன் "பலே பேஷ்" என்று கூறி இரண்டு பண முடிப்புக்களை யத்துஷ்டரிட மளித்தான். அவர்கள் அவற்றைப் பெற்றுக்கொண்டதும் மிக்க சந்தோஷ மடைந் து வண்டியை விட்டிறங்கி யாரேனும் பார்க்கிறுர்களா வென்று முன்னும் பின்னும் பார்த்துவிட்டு இருளில் மறைந்து நழுவிவிட்டார்கள். ஏதேனும் குழப்பம் உண் டாகப்போகிற தென்ற பயத்தால் விபாங்கன் வண்டியை வேகமாக விட்டுக்கொண்டு தன் வாசஸ்தலத்திற்குச் சென் றுன்.

* * * * * *

சங்காதாஸ் புதிதாகக் கண்டுபிடித்த தீ சுருட்டுப் பற்ற வைக்கும் கருவியைக் கண்ட வாதாஸிங் மிக்க சந்தோஷ மடைந்து அதே நினைவோடு தன் வாசஸ்தலத்திற்குச் சென் றுன். சங்காதாஸ் ஏதோ இரசாயன ஆராய்ச்சி செய்து கொண்டு இரசாயன சாலை யறையிலேயே யிருந்தான்.

வாதாஸிங் தன் அறைக்குள் சென்றபோது தபாலி லிருந்து பல கடிதங்கள் வந்திருப்பதைக் கண்டான். சங்கா தாஸுக்கே அதிக கடிதங்க ளிருந்தன. சற்றுநேரம் உட்

கார்ந்தான். அவன் மனதிற்குப் பிடிக்கவில்லை. ஏனெனில் சங்கரதாஸுக்கு வந்த கடிதங்களில் அவசரமாய் உடனே கவனிக்கவேண்டிய சங்கதிகள் ஏதேனு மடங்கியிருக்கலாம். அவன் தொழில் முறைமையில் அப்படிப்பட்ட கடிதங்கள் வந்திருப்பதைப் பார்த்திருக்கிறான். ஆகையால் உடனே சங்கரதாஸின் கடிதங்களைக் கொண்டுபோய் அவனிடம் அளித்துவிட வேண்டு மென்று தீர்மானித்துக் கொண் டான்.

அவன் அவ்வாறே கடிதங்களை யொரு கட்டாய்க்கட்டி யெடுத்துக்கொண்டு இரசாயன சாலைக்குப் புறப்பட்டான். சென்றவன் மறுபடி திரும்பிவந்ததைக் கண்ட சங்கரதாஸ் வியப்படைந்து என்னசங்கதி? என்றான். வாதாஸிங் "தபால் வந்திருந்தது. ஏதேனும் அவசரமான சங்கதி யிருக்கலாகு மென்று கருதி யவற்றை யெடுத்துக் கொண்டு வந்தேன்" என்று கூறிக்கொண்டே சங்கரதாஸ் எதிரிலிருந்த மேஜை மேல் கடிதக்கட்டை வைத்துவிட்டு எதிரிலிருந்த நாற்காலியி லமர்ந்தான்.

சங்கரதாஸ் அக்கட்டை யவிழ்த்து ஒவ்வொரு கடித மாகப் பிரித்து வாசிக்கத் தொடங்கினான். கடைசியில் ஒரு சாதாரணமான வெள்ளைக் கடித உறையைக் கிழித்து அதி லிருந்த ஒரு சிறு கடிதத்தை யெடுத்து வாசித்தான். அதில் இரண்டொரு வரிகளே யிருந்தன. அதை வாசித்ததும் அவன் முகம் சுளித்துக்கொண்டது. அவன் அதை வாசித் துப் பார்த்துக்கொண்ட பின் "வாதாஸிங்! இதன் அர்த்த மென்ன? பார்!" என்று கூறிக்கொண்டே அக்கடிதத்தை யவனிட மளித்தான்.

அதில் "சந்திராபாயைப் பிடித்துக்கொண்டு போய்விட மறுபடி முயற்சி செய்யப்படுகிறது. இப்படிக்கு ஒரு நண் பன்" என்று வரையப்பட் டிருந்தது.

வாதாஸிங் அதை வாசித்துப் பார்த்ததும் முகவாட்டத்தோடு சங்கரதாஸை நோக்கித் தலையசைத்தான்.

சங்கரதாஸ் சற்றுநேரம் சிந்தித்தபின் டெலிபோனருகிற் சென்று சந்திராபாயின் வீட்டிலிருக்கும் டெலிபோன் எண்ணைக் கூப்பிட்டான். பதில் இல்லை. "வாதாஸிங்! என்ன பதில் வரவில்லையே. ஆயினும் யாரோ அந்த டெலிபோனிலுள்ள பேசும் குழாயை யெடுத்து நான் கூப்பிடுவதைக் கேட்டார்கள் என்பது மட்டும் நிச்சயம்" என்று கூறிவிட்டு மறுபடி கூப்பிட்டும் பதிலே யில்லை.

சங்கரதாஸுக்கு ஒன்றும் புலப்படவில்லை. சற்று நேரம் சிந்தித்துப் பார்த்தான். கடைசியில் ஒரு யோசனை யுதித்தது. உடனே எழுந்து சென்று மேஜையருகி லுட்கார்ந்து ஒரு கடிதமெழுதி, அதில் தனக்கு வந்த எச்சரிக்கைக் கடிதத்தையும் வைத்து ஒரு உறையில் போட்டு முத்திரையிட்டு சந்திராபாய்க்கு விலாசம் எழுதி ஒரு ஆள்வசம் கொடுத்தனுப்பினுன்.

* * * *

இதற்கிடையில் கள்ளச் சிறுக்கியாகிய நாகம்மாள் ஒரு நாணயமான தோழியைப்போல் உடை யணிந்து கொண்டு சந்திராபாயின் வீட்டில் மிக்க சிரத்தையும் அன்பும் உடையவள்போல் பலவிதமான வேலைகளைச் செய்யத் தொடங்கினுள். அவள் காண்பவர்கள் அறியாவண்ணம் எப்போதும் டெலிபோன் சத்தத்தைக் கவனித்துக்கொண்டே யிருந்தாள்.

சங்கரதாஸ் டெலிபோனில் பேசியபோது அவளே போய்க் கேட்டுப் பதில்கூருமலிருந்ததோடு டெலிபோன் மணியடிக்கும் சத்தம் வெளியில் கேட்காவண்ணம் அம் மணியில் துணி சுற்றிவிட்டாள். ஆயினும் அவள் அங்

கிருந்து வெளியிற் செல்லப் புறப்படும் சமயம் சந்திராபாய் முதலில் டெலிபோன் மணியடித்த சத்தத்தைக் கேட்டு அந்த அறைக்குள் வந்து நாகத்தை நோக்கி "டெலிபோன் மணி யடித்ததுபோல் சத்தம் கேட்கவில்லையா?" என்றாள்.

நாகம்மாள் சற்றும் சந்தேகத்திற் கிடங்கொடாவண்ணம் உடனே "ஆம் அம்மா! என் பழைய எஜமாட்டி அவர்கள் வீட்டிலிருக்கும் என் பெட்டியை யிங்கு சீக்கிரம் அனுப்பி விடுவதாய்க் கூறினார்கள்" என்றாள். சந்திராபாய் "ஓ! சரிதான்" என்று கூறிவிட்டுப் புத்தகசாலை யறை வழியாகச் சென்றாள். கபடற்றவர்கள் மிகச் சுலபமாக ஏமாந்து போவார்கள்.

இப்போது நாகம்மாள் ஒரேசமயத்தில் இரண்டு காரிய சித்திகளைப்பெற்றாள். ஒன்று டெலிபோன் விஷயத்தில் சந்திராபாய்க்குச் சற்றேனும் சந்தேக முண்டாக வில்லை. இரண்டாவது விபாங்கனுடைய சதியாலோசனைப்படி சீக்கிரத்தில் அவன் ஒரு பெட்டியை யிவள் பேருக் கனுப்புவான் என்பது இவளுக்குத் தெரியும். இப்போது அப் பெட்டிவந்தால் அதைப்பற்றி யிருக்கும் எள்ளளவு சந்தேகமு முண்டாகா வண்ணம் செய்து விட்டாள்.

நாகம்மாள் அவ்வாறு கூறிக்கொண் டிருக்கும் அதே சமயம் சீனக்காரர் வசிக்கும் பிரதேசத்தில் விபாங்கன் இருக்கும் கள்ள அறையில் இரண்டு சீனக்காரர்கள் அப்பெட்டியை யொரு சிப்பமாகக் கட்டிக்கொண் டிருக்கிறார்கள். அதில் ஒருவிதச் சூத்திர நாற்காலியும், குபீலென்று தீப்பற்றி யாவற்றையும் எரித்தழிக்கும் சக்தியுடைய ஒரு புதுவித மான கருவியும் வைத்துச் சிப்பமாகக் கட்டப்படுகின்றன. சீனக்காரர் அவற்றைக் கட்டிக்கொண் டிருக்கையில் விபாங்கன் "நாகம்மாள் ஒருமுறை சந்திராபாயைத் தந்திரமாக

இந்த நாற்காலியி லுட்காரும்படி செய்துவிட்டால் அப்போதே நமது வேலை பாதி நிறைவேறிவிட்ட மாதிரியே'' என்று அந்த நாற்காலியைத் தட்டிக்கொடுத்தான்.

சந்திராபாயின் வீட்டிலிருக்கும் நாகம்மாளாகிய கள்ளி அப்பெட்டியின் வருகைக்காக மிக்க எச்சரிக்கையோடு எதிர்பார்த்தபடியே யிருக்கிறாள். ஏனெனில் அது அனுப்பப் படுமென்றும் அது வந்து சேர்ந்ததும் இவள் என்னசெய்ய வேண்டியதென்றும் இவர்களுக்குள் முன்னமேயே ஆலோசனை செய்யப்பட் டிருக்கிறது.

நாகம்மாள் அப்பெட்டிக்காக எதிர்பார்த்துக்கொண் டிருக்கையில் யாரோ வொருவன் கடிதம் கொண்டு வந்து கதவைத் தட்டினான். அக்கடிதம் ஒருசமயம் சங்கரதாஸிடமிருந்து வந்திருக்கலாகும் என்று கருதிக்கொண்டு துரிதமாய் ஒரு யுக்திசெய்தாள். அதாவது கடிதம் கொண்டுவந்த பையன் வாயிற்படியி லிருக்கையிலேயே நாகம்மாள் துரிதமாய் ஒரு சிறு கடிதத்தை வரைந்து அதை யெடுத்துக் கையில் வைத்துக்கொண்டுபோய்க் கதவைத் திறந்தாள்.

வந்த சிறுவன் சந்திராபாயம்மாளுக் கென்று ஒரு கடிதத்தைக் கொடுத்தான். சந்திராபாய் மணிச் சத்தத்தைக் கேட்டதும் அங்குத் துரிதமாகவந்து, எனக்கு ஏதேனும் கடிதம் வந்ததோ வென்றாள். நாகம்மாள் வந்த கடிதத்தை மெதுவாய்ச் சேபியில் •போட்டுக்கொண்டு தான் எழுதி வைத்திருந்த கடிதத்தை யவளிட மளித்தாள்.

சந்திராபாய் அதை வாசித்துப் பார்த்தாள். அதில்,

"அன்பார்ந்த சந்திராபாயம்மாளுக்கு, இன்று நமது மதத்தின் தர்மசபையில் நடக்கும் விற்கிரையத்தின் பொருட்டு யாவரிடத்திலும் நமது ஆட்களை அனுப்புகிறோம். நீயும் உன்னால் இயன்ற உதவியைச் செய்வாயென்று பூரணமாக

நம்புகிறோம். இப்படிக்கு, விசாலாட்சியம்மாள். மதத்தர்ம பரிபாலன சபைக் காரியதரிசி" என்று வரையப்பட்டிருந்தது.

சந்திராபாய் அதை வாசித்துப் பார்த்தாள். இத்தகைய விவகாரம் நடக்கிறதென்று எனக்குத் தெரியாதே யென்றான்.

அது ஒரு தருமகைங்கரியம். மத சம்பந்தமானது. அந்த மதச்சபையார் யாவரிடத்திலும் யாசித்து அவரவர்கள் எந்தப்பொருளைக் கொடுக்கிறார்களோ அவற்றையெல்லாம் சேகரம் செய்து ஒருநாளைக்கு விசேஷ சந்தைவைத்து விற்பார்கள். இப்படி விற்பனையாகும் பொருள் முழுமையும் தங்கள் மதாபிவிர்த்தியின் பொருட்டுச் செலவழிக்கப் படும் என்று யாவரும் அறிவார்கள். அதனால் அந்த விளம்பரத்தைக் கண்ட ஒவ்வொருவரும் மதாபிமானத்தால் தங்கள் வீட்டிலுள்ள சமான்களில் எதையேனும் அவர்களுக்குக் கொடுப்பார்கள்.

சந்திராபாய் இதைப்பற்றி யெனக்கு ஒன்றும் தெரியாதே யென்று கூறினும் "ஆயினும் இதற்கு நாமும் நம்மால் கூடியதைச் செய்யவேண்டும்'' என்றாள்.

சந்திராபாய் தன் அறையிலுட்கார்ந்து அக்கள்ளக் கடிதத்தை வாசித்துக்கொண்டிருக்கையில் நாகம்மாள் சிறுவன் கொண்டுவந்த உண்மையான கடிதத்தை வாசித்துப் பார்த்தாள். அது சங்கரதாஸ் எழுதியதென்று அறிந்து கொண்டாள். "சரிசரி நமது காரியம் இங்கு நிறைவேறும் வரையில் சங்கரதாஸிற்குப் பீதியை யுண்டாக்கி அவன் முயற்சிகளை வேறு மார்க்கங்களில் பிரவேசிக்குமாறு விபாங்கன் செய்கிறான்'' என்று தனக்குள் சிந்தித்துக் கொண்டாள்.

சுமார் அரைமணிநேரங்கழித்து வெளிக்கதவை யாரோ தட்டும் சத்தம்கேட்டு ஜெகநாதன் துரிதமாகச்சென்று கதவைத் திறந்தான். உடனே ஒரு ஆள் உள்ளேவந்து "அம்மா! இங்கேயிருக்கும் நாகம்மாள் என்பவர்களுக்கு ஒரு சாமான் கொண்டுவந்திருக்கிறோம்" என்றான்.

இச் சாமானின் வருகைக்காக மிக்க சாக்கிரதையோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த இந்திரஜாலக் கள்ளியாகிய நாகம்மாள் என்பவள் உடனே சென்று "ஓ! இதுதான் நான் எதிர்பார்த்திருந்த என்பெட்டி" என்று கூறிவிட்டு ஜெகநாதனை நோக்கி "தயவுசெய்து இதை மேல்மாடியில் கொண்டு வைக்கும்படி ஏற்பாடுசெய்தால் உமக்கு மிக்க வந்தனமுடையவளாக விருப்பேன்" என்றாள்.

மாதர்களுக்கு அளவுமீறிய சுயாதீன மளிப்பதோடு அவர்களை ஆடவர்களினும் மேலான பிறப்பாகவும்—இன்னும் பெண் தெய்வங்களாகவும் கருதும் மதியீனமுடைய மேல்நாட்டார் இத்தகைய இந்திரஜாலக் கள்ளியாகிய நாகம்மாளிடம் ஏமாந்துபோவது பெரிய வியப்பல்லதான்.

அவள் பெட்டியைப்பற்றி யவ்வாறு கூறியதே வந்திருந்த ஆட்கள் அதை யெடுத்துப்போய் இவள் எங்கு வைக்கும்படி கூறினளோ அதே யிடத்தில் வைத்துவிட்டார்கள். அவள் அவர்கள் கொண்டுவந்த புத்தகத்தில் அப்பெட்டியைப் பெற்றுக் கொண்டதற்காகக் கையொப்பம் வைத்துவிட்டு அவர்களை யனுப்பிவிட்டாள்.

பெட்டியைக் கொண்டுவந்து வைத்தவர்கள் சென்றதே நாகம்மாள் சற்றுநேரம் அந்த அறையின் சாளரத்தருகில் நின்றுகொண்டு யாவரும் போய்விட்டார்களா, உள்ளே யாருமில்லையா என்று பார்த்தாள். யாவரும் போய்விட்டார்களென்றும் இருப்பது தான்மட்டுமே யென்றும்

தெரிந்ததே அவள் அந்த அறையின் கதவை யுட்பக்கம் பூட்டிக்கொண்டு, தனக்குவந்த பெட்டியைத் திறந்து பார்த்தாள்.

அப்பெட்டி யொரு விசாலமான பெரியபெட்டி. முன்னே யதிலிருந்து விபாங்கன் ஆயத்தம் செய்தனுப்பிய நாற்காலியை வெளியிலெடுத்து வைத்தாள். அந்த நாற்காலியைப் பழைய உடைகள் தொங்கிக்கொண் டிருக்கும் இடத்தின்கீழ் வைத்தாள். அந்த அறை பழையசாமான்கள் இருக்கும் ஒரு கிடங்குபோன்றது.

நாற்காலியைப் பழைய வுடைகள் தொங்கிக்கொண் டிருக்கு மிடத்தில் வைத்தபின், வீட்டையே யடியோடழிக்கக்கூடிய தீ யெந்திரத்தை யெடுத்து அந்த நாற்காலியின் பின்னுல் நிழலில்வைத்து அதன்மேல் உலர்ந்திருக்கும் வஸ்துக்களை மூடிவிட்டாள்.

இக்காரியங்களைச் செய்துவிட்டபின் நாகம்மாள் நாற்புறங்களிலும் சுற்றிப்பார்த்தாள். அங்கு ஒரு பழைய நாற்காலி யிருந்தது. அதைக்கொண்டுபோய் கண்ணுக்குப் புலப்படாத விடத்தில் மறைத்து வைத்துவிட்டாள்.

ஏனெனில் சந்திராபாய் அந்த அறைக்கு வரின் தற்செயலாக உட்காருகிறவள்போல் இப்போது விபாங்கன் அனுப்பிய நாற்காலியில் உட்காரவேண்டு மென்பது அவள் பிரியம். அவர்கள் சதியாலோசனைக்கு அதுதான் அனுகூலம். அங்கு இன்னெரு நாற்காலி யிருந்தால் சந்திராபாய் அதன்மே லுட்கார்ந்து விடுவாள். அதனுல் தங்கள் சதியாலோசனை தடைப்பட்டு விடும். அதற்காகவே அங்கு ஒரு நாற்காலியே யிருக்குமாறு செய்து விட்டாள்.

நாகம்மாள் அவ்வாறு தன் ஏற்பாடுகளை முடித்ததும் கீழிருந்த சந்திராபாய்க்கு நினைவு வந்தது. "ஆ! நாம் இன்

னும் அச்சங்கத்திற்குக் கொடுத்தனுப்ப எதையும் ஆயத்தம் செய்யவில்லையே என்று நினைத்துக்கொண்டு மேலேயிருக்கும் உக்கிராண அறைக்குச் சென்றாள். அவள் வருவதையுணர்ந்த நாகம்மாள் சட்டென்று ஒரு இடத்தில் மறைந்து கொண்டாள்.

சந்திராபாய் அந்த அறைக்குள் சென்று அங்கிருந்த உடைகளை யொவ்வொன்றாய் எடுத்துப்பார்த்தாள். எதுவும் கொடுக்கத் தகுந்ததாக அவளுக்குப் புலப்படவில்லை. இதற்கிடையில் நாகம்மாள் அந்த அறையின் கதவருகில் வந்து சந்தின் மூலமாய் உள்ளே நடப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

எந்தச்சாமானை அச்சங்கத்திற்குக் கொடுக்கலாம் என்பதிலேயே ஆழ்ந்த சிந்தனை செலுத்தியிருந்த சந்திராபாய் தன்னையறியாமலே அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்துவிட்டாள். உட்கார்ந்ததே அந்த மரத்தில் நாற்காலியிலிருந்த சூத்திரம் வேலை செய்யத் தொடங்கியது. அதில் மறைந்திருந்த இரும்புக்கட்டுகள் சட்டென்று வெளிப்பட்டு சந்திராபாயின் புயங்களையும் கட்டிவிட்டதுபோல் பிடித்துக்கொண்டன. அவளால் அப்படியிப்படி யசையமுடியவில்லை. அதே சமயம் நாற்காலியின் பின்பக்கமிருந்த ஒரு குழாயிலிருந்து ஒருவித நெடியான ஆவி புஸ் என்று கிளம்பி அவள் முகத்தில் தாக்கியதால் அவள் ஸ்மரணை யிழந்துவிட்டாள். சந்திராபாய் பூரணமாய் போனில் சிக்கிக்கொண்டாள்.

சந்தின்வழியாய்த் தங்கள் வஞ்சமாகிய தந்திரம் பலித்துவிட்டதைக் கண்ட நாகம்மாள் புன்னகைபுரிந்து உட்பக்கமிருந்தசாவியை யெடுத்துக் கதவை மூடிப் பூட்டிக்கொண்டாள். இனி யவள் அங்கிருப்பது ஆபத்து. தன்வேலை முடிந்துவிட்டதால் உடனே விபாங்கனிடம்போய்ச் சங்கதி

யைக் கூறவேண்டியது அவள் வேலை. அவ்வாறுதான் அவளுக்குக் கட்டளையிடப்பட் டிருந்தது.

நாகம்மாள் மெதுவாய் அங்கிருந்து புறப்பட்டு யார் கண்ணுக்கும் புலப்படாமல் சந்திராபாயின் அறைக்குச் சென்ருள். அங்கு சென்றதும் சந்திராபாயின் அத்தையாவது வேலைக்காரியாகிய மாரியாவது பார்க்காவண்ணம் மிக்க எச்சரிக்கையோடு சந்திராபாயின் பெட்டியைத் திறந்து, முன்பு விபாங்கன் சந்திராபாயைப் பிடித்துச் சென்றபோது அவள் அணிந்திருந்த உடைகளை யெடுத்து ஒரு சிறு பையில் வைத்துக்கொண்டு, உடைப்பெட்டியை மூடிவிட்டுத் தன் மேல் போர்வையை யெடுத்துக்கொண்டு யாருக்கும் தெரியாமல் வீட்டை விட்டுக் கிளம்பிவிட்டாள்.

23-வது அத்தியாயம்

நாகம்மாள் சந்திராபாயின் வீட்டைவிட்டுப் புறப்பட்ட அரைமணி நேரத்திற்குள் மேட்டுத்தெருவிலிருக்கும் சீட்டாக் கிடங்கிற்குச் சென்ருள். அங்குதான் சினைக்காரர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து சீட்டாப்பிடிப்பது. அவள் அங்குச் சென்றதும் "எஜமான் இருக்கிருரா?" என்று கேட்டாள். அந்த விடத்திலிருந்த முதலாளி மரியாதையாய்ப் பின்பக்க மிருக்கும் ஒரு அறையைக் காட்டினன்.

அந்த அறை ஒரு அதிசயமான காலியறை. அதில் இரண்டொரு நாற்காலிகளும், ஒரு மேஜையும் அவையன்னியில் மத்தியில் நாட்டப்பட்ட ஒரு ஸ்தம்பமும் இருந்தன. அங்குச் சங்கும் விபாங்கனும் சந்திராபாயின் கூந்தலைப் போலவே யிருந்த ஒரு பொய்ச் சிகையை வைத்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நாலைந்து சினைக்காரர்கள் மரியாதையாய்த் தூரத்தில் நின்று பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

விபாங்கன் தன் முன் வந்து நிற்கும் நாகம்மாளைக் கண்டதும் "ஹா! அந்த உடைகளைக் கொண்டுவந்துவிட்டாயா?" என்று கேட்டான். அக்கள்ளி "ஆகா யாவும் தாங்கள் கூறியபடிக்கே நடந்தன.

விபாங்கன்: — "நல்லதாயிற்று உன்வரையில் நீ யுடனே ஆயத்தமாகலாம்" என்ருன்.

நாகம்மாள் அவ்வுடைகளை யெடுத்துச் சென்று சற்று நேரத்திற்குள் அவற்றைத் தான் அணிந்து கொண்டாள்.

* * * * *

இதற் கிடையில் இத் துஷ்டர்கள் சங்கரதாஸையே பிடித்துக்கொள்வதற்காக இரண்டாவதொரு போன் ஆயத்தம் செய்தார்கள். சந்திராபாயைப் பிடித்துக்கொண்டுபோக மறுபடி முயற்சி செய்யப்படுகிறதென்று சங்கரதாஸுக்கனுப்பப்பட்ட கடிதம் அவனை ஏமாற்ற வந்த முதற் கடிதமே. அதையே அவன் தான் எழுதிய கடிதத்தில் வைத்து சந்திராபாய்க் கனுப்பினுன். அக்கடிதத்தை மாயக் கள்ளியாகிய நாகம்மாள் எடுத்துக்கொண்டு அதற்குப் பதிலாகவே தர்ம கைங்கரியமான ஒரு கடிதத்தை யெழுதி சந்திராபாய்க் களித்து ஏமாற்றினுள். ஆனுல் அவள், விபாங்கன் சங்கரதாஸைப் பயமுறுத்தி வேறு விஷயங்களைச் செய்ய விட்டுவிட்டுத் தன் காரியத்தை நிறைவேற்றிக்கொள்ள முயல்கிருன் என்று அப்போதே யறிந்து கொண்டாள்.

சங்கரதாஸும் வரதாஸிங்கும் இரசாயன சாலையறையிலிருக்கிருர்கள். சங்கரதாஸ் ஏதோ இரசாயன ஆராய்ச்சியில் ஒரு திராவகத்தை யெடுத்து ஒரு கண்ணுடிக் குழாயில் ஊற்றப் போகிருன். அப்போது தூக்கிய இரண்டு கரங்களையும் அப்படியே நிறுத்திக்கொண்டு உற்றுக் கேட்டான். வெளியில் யாரோ கதவைச் சுறண்டும் சத்தம்கேட்டது.

சங்காதாஸ் "வரதாஸிங் சற்று பேசாமலிரு" என்று கூறிவிட்டுப் பூனைபோல் வெளிக் கதவருகிற் சென்றான்.

உண்மை யென்னவெனில் வெளியில் ஒரு சீனுக்கார வாலிபன் சாக்கிரதையாய்க் கதவருகில் வந்து பதுங்கிக் கொண்டிருக்கிறான். அவன் சங்காதாஸ் கதவைத்திறப் பதற்காகவே எதிர்பார்த்துக்கோண்டு பந்தயத்திற்கு ஓடு பவன்போல் ஓடத் தயாரா யிருக்கிறான். சாதாரணமாய்ப் பார்ப்பவர்களுக்கு அவன் உற்றுக்கேட்க அங்கு நிற்பவன் போல் தோன்றும்.

சங்கரதாஸ் கதவைத்திறந்ததும் அவன் துரிதமாய் ஓட்ட மெடுத்தான். ஆனால் அவன் ஒரு கடிதத்தை யங்கு நழுவ விட்டுச்சென்றான். சங்காதாஸ் குனிந்து அக்கடிதத்தை யெடுக்கையில் வாதாஸிங் அவனைத் துரத்திச் சென்றான். ஆனால் அவன் தந்திரமாய் தப்பித்துக்கொண்டு ஓடிவிட் டான்.

வரதாஸிங் திரும்பிவந்து சங்கரதாஸை நோக்கி "அக் கள்ளபயல் எப்படியோ நழுவிப்போய்விட்டான். இதென்ன கடிதம்?" என்றான்.

சங்கரதாஸ் "என்னமோ ஒருகடிதத்தைக் கீழே விட்டு விட்டுச் சென்றான்" என்று கூறிக்கொண்டே யதை வரதா ஸிங்கிட மளித்தான். வரதாஸிங் அதை வாங்கி வாசித்துப் பார்த்தபோது அதில்,

"அவன் என்னசெய்கிறான் என்று பார்த்துக்கொண்டு மேட்டுத்தெரு 116-வது எண்ணில் கீழ்க்கட்டறையில் வந்து என்னிடம் அறிவி" என்றிருந்தது.

அக் கடிதத்தி னடியிலிருந்த சர்ப்பக்குறியால் அது விபாங்கன் எழுதிய கடிதம் என்று நன்றாய்த் தெரிந்தது.

வரதாஸிங் "சங்கரதாஸ் இது ஒரு உளவே" என்ருன்.

சங்காதாஸ் ஒரு நிமிடம் வரையில் மௌனமா யிருந்தான். சற்று நேரம் அக்கடிதத்தை மறுபடி மறுபடி அக்கரையோடு படித்துப் பார்த்தான். அதே சமயம் அவன் தன் மனதில் எதையோ சிந்தித்துக்கொண் டிருந்தான். கடைசியில் "அது எப்படி யிருந்தாலும், நான் அதைப் போய்ப் பார்க்கப் போகிறேன். வரதாஸிங்! நான் சென்ற பின் நீ போய் சந்திராபாய் எப்படி யிருக்கிருள் என்று பார்த்து வரவேண்டும்" என்ருன்.

அவ்வாறு கூறியதும் சங்கரதாஸ் தன் முகம் பார்ப்பவர்களுக்குத் தெரியாவண்ணம் மறைத்துக்கொண்டு அங்கிருந்து வெளிப்பட்டான். சங்கரதாஸ் வெளியிற் சென்றதும், முன்பு வந்து கதவைச் சுறண்டிக் கடிதத்தை யங்கு போட்டுச் சென்ற சிறுக்காராகிய வாலிபன் வெளியில் காத்துக்கொண்டே யிருந்தான். இப்போது சங்கரதாஸ் வெளியிற் புறப்பட்டதும் அவன் சங்கரதாஸைப் பின்பற்றிச் சென்ருன்.

சங்காதாஸ் அக்கள்ளன் கீழே போட்டச் சீட்டில் குறிக்கப்பட்ட மேட்டுத் தெருவிற்குச் சென்ருன். அவன் அவ்வீதியில் குறிப்பிட்ட வீட்டிற்குச் சென்ருன். சங்கரதாஸ் அவ்வீட்டிற்குள் சென்றதும் ஒரு ஆசனத்தில் உட்கார்ந்தான். அந்த ஹோட்டலின் முதலாளி ஒரு புகைப் பிடிக்கும் குழாயைக் கொண்டுவந்து அவனிட மளித்தான். சங்கரதாஸுக்கு அதைப் பிடிக்கச் சற்றும் பிரியமில்லையெனினும் பிடிப்பவன்போல் அபிநயம் செய்தான்.

இதற்குள் அவ்வீட்டின் பின்பக்கமிருந்த அறையில் மாயக்கள்ளியாகிய நாகம்மாள் சந்திராபாயின் வீட்டிலிருந்து தான் களவாடிக் கொண்டுவந்த சந்திராபாயின் உடை

களை யணிந்துகொண்டு சந்திராபாயைப் போலவே வேட மணிந்துகொண்டாள். விபாங்கன் கடைசியாக அந்தவேடத்திற்குத்தக்க முடிவான காரியங்களைச் செய்தான். அந்த அறையில் இருந்த சினுக்காராகிய போக்கிரிகள் நால்வரும் அறையின் வாயிற்படியில் ஒவ்வொரு பக்கத்திலும் இரண்டிரண்டு பேராக ஆயத்தமாய் மறைவில் நின்றூர்கள்.

இரண்டொரு நிமிடங்கள் கழித்து விபாங்கன் நாகம்மாள் செவியில் இரகசியமாய் என்னமோ கூறினுன். அதன் பிறகு அவனும் சங்கும் அங்கிருந்த கண்ணுடிப்பாத்திரங்களை உயரவெடுத்துப் பூமியில் ஓங்கியடித்துக் கால்களால் தரையில் தடதடவென்று சத்தமிட்டார்கள். அதேசமயம் நாகம்மாள் ஏதோ பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண்டவள்போல் அலறிக் கூச்சலிட்டாள். அவள் கூச்சல் ஏதோ கொலை நடக்கு மிடத்திலிருந்துண்டாகும் கூச்சல்போல் தெரிந்தது. இத்தகைய சத்தத்தைக் கேட்டால் யாருமே பெரியகுழப்பம் நடப்பதாகக் கருதுவார்கள்.

சங்காதாஸ் அங்கு ஏதோ விவகாரம் நடக்கப்போகிறதென்றெண்ணியே வந்திருக்கிறுன். வெளியில் கூடத்தில் உட்கார்ந்திருந்த சங்காதாஸ் இச்சத்தத்தைக்கேட்டான். உடனே யுற்றுக்கேட்டான். யாரோ ஒரு பெண்பிள்ளை பரிதபிப்பதுபோல் சத்தம்கேட்டது. அதே சமயம் அந்த சத்தம் உண்டான அறையின் கதவு திறக்கப்பட்டது. ஒரு பெண் வெளியில் வர முயல்கிறுள். சங்கு பின்னுலிருந்து அவளைக் கோபத்தோடு உள்ளே யிழுத்துக்கொண்டான். மறுவிநாடி கதவு மூடப்பட்டது.

யாவும் ஒரு விநாடியில் நடந்துவிட்டன. அப்பெண்ணின் உடை முதலியவற்றைக் கண்டதே அவள் சந்திராபாயேயென்று சங்காதாஸின் மனதிற்பட்டது. அவ்வரு

வம் சந்திராபாயேயென்று நம்பிக்கொண்டான். ஆகையால் உடனே தன்கைத்துப்பாக்கியைக் கரத்திலெடுத்துக்கொண்டு தன் பலங்கொண்டவரையில் அக்கதவின்மேல் மோதினான். கதவு திறந்துகொண்டது.

சங்கரதாஸ் உள்ளே நுழைந்தான். உடனே உட்பக்கம் பதுங்கிக்கொண்டிருந்த நான்கு போக்கிரிப்பயல்களும் பக்கத்திற் கிருவராகப் பாய்ந்து வந்து அவன்மேல் விழுந்து பிடித்தார்கள். ஒருவன்மேல் நால்வர் விழுந்து பிடித்தாலும் சங்கரதாஸ் பின்னிடையாமல் தைரியத்தோடு தாக்கி இருவரை யுடனே தரையில் வீழ்த்தி விட்டான்.

ஆச்சு இன்னும் ஒரு நிமிடத்தில் மற்ற இருவரையும் வீழ்த்தி விடுவான். அச்சமயம் அம் மாயக்கள்ளியாகிய நாகம்மாள்தான் சந்திராபாய் வேடத்தோடு சங்கரதாஸின் எதிரில் வந்தாள். அச்சமயம் அவன் மனம் எத்தகைய நிலைமையி லிருக்குமென்பதை யிதை வாசிப்போரே யுணரலாகும். அவன் பிரமையடைந்து அவளை நோக்கினான். மறு விநாடி அக் கள்ளி தன் வேடத்தை யுடனே களைந்துவிட்டாள்.

இதுகாறும் சந்திராபாயே யென்று தான் கருதியிருந்தவள் உண்மையில் சந்திராபாயல்லவென்று தெரிந்தபோது அவனுக்குண்டாகிய வியப்பும் கலவரமும் கொஞ்சமல்ல. ஆகையால் அத்தகைய மனக் குழப்பத்தில் சங்கரதாஸ் இரண்டொரு நிமிடங்கள் தன்னை மறந்து திகைப்பிலிருப்பது சுபாவமே.

அதுவே சீனாக்காரர்களாகிய அத்துஷ்டர்களுக்கு நல்ல அநுகூலமான அவகாசத்தை யளித்துவிட்டது. சீனாக்காரர் அவன்மேல் பாய்ந்து அவனைப்பிடித்துக் கட்டிவிட்டார்கள். அதே சமயம் அவன் பின்பக்கம் ஒரு சீனாக்காரன் வந்து அவன் வாயில் துணியடைத்துவிட்டான்.

18653

மாதவி மாதவன் அல்லது

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

(2 - பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மன மகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்துகொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும், படிப்போர் மனத்தைக் கவரக்கூடியனவாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஸ்ரீ ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 56 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

இரத்தினபுரி இரகசியம்	ரூ.	அ.	தினகரசுந்தரி ரூபா	1	0
2-பாகமும் ...	4	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 2-பாகமும்...	3	0	ரத்தினாபாய் ...	1	12
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	12
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
கனகபூஷணம்2பாகம்...	3	8	கமலசேகரன் ...	1	12
இராஜாமணி ...	2	0	பூங்கோதை ...	0	10
ஆனந்தஸிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஞானசெல்வாம்பாள்			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
5 பாகமும் ...	9	10	லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட், மதராஸ்.